விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 223 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 14 ஞாயிற்றுக்கிழமை (30.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழ்.மாநகர சபையின் முத்தமிழ் விழா





(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகரசபை முன்னெடுத்த முத்தமிழ் விழா-2023 நேற்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணி முதல் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்றது.
யாழ் . மாநகர சபையின் ஆணை 19

## பட்டம் பெற்று வீடு திரும்பிய இளம் யுவதி

### விபரீத முடிவெடுத்து மரணம் சுழிபுரத்தில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)
பட்டமளிப்பு விழாவின் பின்னர் வீடு திரும்பிய யுவதி ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள் 19

### திருநெல்வேலியில்
## வாள்வெட்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் நேற்று அதிகாலை வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.
பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருந்த வீடு ஒன்றின் மீது நேற்று 19

### இரு வேறு குற்றம்
## கிளிநொச்சியில் மூவர் கைது

(கிளிநொச்சி)
இரு வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய மூவர் நேற்று கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்று 19

# தேசிய நல்லிணக்கத்தை இலங்கை ஏற்படுத்த வேண்டும்

## இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)
**நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை இலங்கை ஏற்படுத்த வேண்டும் என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் தெரிவித்துள்ளார்.**

கனேடிய தமிழர் பேரவையினால் 15ஆவது ஆண்டாக நடத்தப்படவுள்ள "கனேடியத் தமிழர் நிதிசேர் நடை" மற்றும் அதனூடாகத் திரட்டப்படும் நிதியின் மூலம் வழங்கப்படவுள்ள உதவி என்பன பற்றித் தெளிவுபடுத்தும் நோக்கிலான ஊடகவியலாளர் சந்திப் பொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு, மரதா ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
அச்சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே உயர்ஸ்தானிகர் மேற்குறிப்பிட்டவாறு வலியுறுத்தினார். 19

### துப்பாக்கிச் சூட்டு காயத்துடன்
## வவுனியாவில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்பு

(வவுனியா)
வவுனியா பாலமோட்டை கோவில் குஞ்சுகுளம் பகுதியில் துப்பாக்கி சூட்டு காயத்துடன் இளைஞன் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கோவில் குஞ்சுகுளம் பகுதியில் தோட்டம் செய்து வரும் ஓமந்தை வேப்பங்குளத்தைச் சேர்ந்த 21 வயதுடைய சற்குணராசா டிசாந்த் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். 19

## பொருளாதாரத்தை மீட்க ஒத்துழைப்பு; கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவு

### பிரான்ஸ் ஜனாதிபதி ரணிலிடம் உறுதி



(கொழும்பு)
இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு, கடன் மறுசீரமைப்புக்கும் ஆதரவு வழங்கப்படும் என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.
வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பிரான்ஸ் 19

## மாகாண அதிகாரங்களை அமுலாக்க அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும்

### யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பத்மநாதன்

(யாழ்ப்பாணம்)
மாகாண சபை அதிகாரங்களை நடைமுறைப்படுத்த அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பத்மநாதன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நீண்ட வரலாறு உண்டு. தமிழ்த் தலைவர்கள் உரிய 02

## வாகன இறக்குமதி குறித்து இப்போது அறிவிக்க முடியாது

### வாகன இறக்குமதியாளர்கள் சங்கம்

(கொழும்பு)
வாகனங்களை மீண்டும் எப்போது இறக்குமதி செய்ய முடியும் என்பது குறித்து தற்போதைக்கு உறுதியான அறிவிப்பை வெளியிட முடியாது என வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
எதிர்காலத்தில் இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வது அவசியமானால் அதற்கான கொள்கைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவர் சம்பத்மெரெஞ்சி தெரிவித்திருந் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- பராமரிப்பு தொழில்நுட்ப உதவியாளர் - Maintenance Technician (Electrician, Plumber)
- விருந்தினர் விடுதி பராமரிப்பாளர் - Housekeeping Assistant
- சலவையக உதவியாளர் - Laundry Helper

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். தங்களது சுயவிபரக் கோவையை 06.08.2023 இற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்காணும் முகவரிக்கு/ மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(16563)

**021 720 0707/ 077 470 5759**
info@tilkohotels.com
Tilko Jaffna City Hotel 70/6, K.K.S Road, Jaffna.

## மாகாண...

நேரத்தில் கேட்கவேண்டியவற்றை கேட்காமையின் தவறே இலங்கையில் இனப் பிரச்சினை உருவெடுத்தது. இராமநாதன் தொடக்கம், 50:50 திட்டத்தினை முன்வைத்த காலம் வரையான தலைவர்களின் மகத்தான தவறே அதுவாகும். அப்போதைய தமிழ்த் தலைவர்கள் கொழும்பை மையமாக கொண்டு வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சினையை நோக்கினார்கள்.

கிழக்கு மாகாணம் மூன்று சமூகங்களின் பிரதேசமாக உள்ளது அதிலும் குறிப்பாக முஸ்லிம் சமூகம் தமிழ் சமூகத்திலும் பார்க்க கூடுதலாக காணப்படுகின்றனர். திருகோணமலையில் பெருந்தொகையான தமிழர்கள் முஸ்லிம்களாக மாறிவிட்டார்கள். ஏனெனில் தமிழர்களை கவனிப்பார்கள் இல்லை. அவர்களை கவனிப்பதற்கு அதிகாரமும் இல்லை.

எமக்கான அதிகாரங்களை பெற்றுக் கொண்டால் நிலங்களையும், கடல் வளங்களையும் பயன்படுத்தி பொருளாதாரத்தில் பலமடைய முடியும். தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொள்ள முடியும் அதற்கு தக்க தலைமை வேண்டும்.

எனவே உரிய முறையில் மாகாணசபை அதிகாரங்களை நடைமுறைப் படுத்த எல்லா கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும். கல்வியியலாளர்கள், பொது மக்களும் ஆதரவு வழங்க வேண்டும்.

மாகாணசபை முறைமை தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வல்ல. கால காலம் இலங்கை ஜனாதிபதிகள் ஒவ்வொரு தீர்வு முறைமைகளை முன்வைத்தனர். எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் இறுதித் தீர்வை முன்நிபந்தனையாக வைத்தால் சிங்கள ஆட்சியாளர்கள் ஒற்றையாட்சியையே வலியுறுத்துவார்கள்.

5வருடங்கள் சென்றால் வடக்குமாகாணம் தமிழர்களின் மாகாணம் என்று கூறும் நிலை மாறிவிடும். அதற்கு பின் எந்த அதிகாரத்தை கேட்க முடியும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எப்படி கலைப்பீடத்தை தவிர ஏனைய பீடங்கள் பெரும்பான்மையானவர்களுடையதாக மாறியதோ அது போல் வடக்குமாகாணமும் மாற்றமடையும்.

தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் தமது சமூதாயத்தின் அபிலாசைகளையும், அவர்களது இருப்பைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். இதுவே அரசியல் தலைவர்களின் கடமை எனத் தெரிவித்தார்.

(ம-7.33)

## PickMe METER TAXI

பிராந்திய விற்பனை பிரதிநிதி (Area Sales Executive) - உப விற்பனை முகவர் (Sub Dealers)

எமது நிறுவனத்திற்கு மேல் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்கள் உள்ளது இவ்வெற்றிடங்களுக்கு ஆண் | பெண் இரு பாலினரும் விண்ணப்பிக்கலாம் மாதம் 100000 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம்....!

(16562)



பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் (உடனடியாக எமக்கு அறிய தரவும்)

மேலதிக விவரங்களுக்கு அழைக்கவும்
**0774 737 737**

## PickMe METER TAXI

நாங்கள் வட மாகாணத்தில் ஆரம்பிக்கிறோம்....!!!
உங்கள் வாகனங்களை இப்போதே பதிவு செய்யுங்கள்....!!!
(முச்சக்கர வண்டி, வேன், கார், மினி லாரி)

சமர்ப்பிக்கவேண்டியவை ஆவணங்கள்:-
- வாகன புகைபடம் (முன், உள்பகுதி, கரை பகுதி)
- சாரதி அனுமதிபத்திர் - தேசிய அடையாள அட்டை
- வாகன வரி நகல் - வாகன இன்சூரன்ஸ் நகல்
- சாரதி புகைப்படம்

(16562)

அங்கீகரிக்கப்பட்ட வடக்கு மாகாண விநியோகஸ்தர்
**0774 737 737**



## சொர்க்கம் திருமண சேவை

- லண்டனில் வசிக்கும் 39 திருவோணம்- 1 மற்றும் 40 அவிட்டம் நட்சத்திரமுடைய மணமகன்களுக்கு மணமக்களை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.
- கனடாவில் வசிக்கும் 84 மிருகசீரிடம் மற்றும் 31 சுவாதி - 4 நட்சத்திரமுடைய மணமகன்களுக்கு மணமக்களை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.
- 1998 இல் (R.C) மற்றும் 1993 இல் பிறந்த மணமக்களுக்கு தகுந்த மணமகன்களை வெளிநாட்டில் எதிர்பார்க்கின்றோம்

(16566)

**001 416 666 1855(கனடா),**
**077 887 6969, 077 200 0230**
**077 650 5097 (யாழ்ப்பாணம்)**

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் பிரபல நகைக்கடைக்கு விற்பனையாளரும் கணக்காளரும் தேவை. (இருபாலரும்)

(16564)

**077 773 0567**

## காணி விற்பனைக்கு

நாவற்குழியில் 85 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (மேட்டுக்காணி)

(16564)

**077 773 0567**

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் உள்ள டிஷ் ANTENNA மற்றும் கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை மற்றும் INSTALLATION /REPAIR செய்யும் கடைக்கு

- டிஷ் ANTENNA பொருத்துதல் மற்றும் REPAIR செய்ய கூடிய TECHNICIAN.
- எலெக்ரோனிக்ஸ் பொருட்கள் விற்பனையில் அனுபவமுள்ள விற்பனையாளர்.
- வியாபாரம் மற்றும் வேலையாட்களை நிர்வகிக்க கூடிய பொறுப்பாளர்.

ஆகியோர் தேவை. திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சம்பளம் மற்றும் உணவு, தங்குமிடம் கிடைக்கும் தொடர்பு கொள்ளவும்.

(16561)

**ராஜன் : 077 771 0785**

## மரண அறிவித்தல்



### திருமதி ஸ்ரீரஞ்சன் சறோஜா

சுழிபுரம் மத்தி சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீரஞ்சன் சறோஜா அவர்கள் 25.07.2023 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா(பொலிஸ் உத்தியோகத்தர்) - மீனாட்சிபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் தொல்புரம் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான FR இராசரத்தினம்(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் இராசரத்தினம் ஸ்ரீரஞ்சன்(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் ரஞ்சன் GS) அவர்களின் பாசமிகு மனைவியும் கோமதி(கனடா), விஜய்(ஜேர்மனி), சர்மதி ஆகியோரின் அன்புத்தாயாரும் அசோகுமாரன்(ஒய்வுநிலை மின்சார சபை உத்தியோகத்தர்), காலஞ்சென்ற செல்வராணி, பத்மகுமாரன்(ஜேர்மன்), கிருஷ்ணகுமாரன்(ஜேர்மன்), காலஞ்சென்ற பாலகுமரன் ஆகியோரின் அன்பு சகோதரியும் நிமலதாஸ்(கனடா), ரூபமீனா(ஜேர்மன்) வேணுதாஸ் ஆகியோரின் மாமியாரும் ருக்சன், தமன்னா, ரோபினா, துவினா, கவினா, நிக்சன், அக்சனா மற்றும் சேனுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.07.2023 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(C-6979)

குடும்பத்தினர்
076 806 3088

## 2ம் ஆண்டு நினைவஞ்சலியும் பிறந்த தின நாளும்



பிறப்பு 30-07-1940

இறப்பு 21-07-2021

மட்டக்களப்பு ஊரணியைப் பிறப்பிடமாகவும் கதிரிப்பாய் அச்சுவேலி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் நடுவில்தம்பி சிவசம்பு

(இளைப்பாறிய கடற்படை வீரர்)

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
ஆறாது உங்கள் நினைவலைகள்...
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் - ஐயா
மாறாது உங்கள் புன்சிரிப்பு முகம்...

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.26/16, கதிரிப்பாய்
பாடசாலை வீதி,
கதிரிப்பாய், அச்சுவேலி.

(16525)

தகவல் -
குடும்பத்தினர்
021 226 0303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 குறித்து முடிவு எடுக்க ரணிலுக்கு அதிகாரம் இல்லை

## உதய கம்மன்பில

(கொழும்பு)

**13 ஆவது திருத்தம் குறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது. அதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து 13 இன் ஏனைய அம்சங்கள் பற்றி பேசுவதற்கு அழைப்பு விடுத்து விட்டு 13 பிளஸ் என்ற நிலைப்பாட்டுக்குள் இருந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் தற்போது உள்ள தேசிய நல்லிணக்கம் இல்லாமல் போகும். பொலிஸ் அதிகாரம் மற்றும் காணி அதிகாரம் ஆகியவற்றை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்க ஒரு போதும் இடமளிக்க முடியாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்படுமாயின் அதற்கான விசேட பொறிமுறை ஒன்று வகுக்கலாம். அதை விடுத்து காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது முரண்பாட்டை தோற்றுவிக்கும்.

13 ஆவது திருத்த அமுலாக்கம் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடையாது. தற்போதைய பாராளுமன்றத்துக்கும் மக்களாணை இல்லை. ஜனாதிபதிக்கும் மக்களாணை இல்லை. 13 தொடர்பில் தீர்மானிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கே உண்டு எனத் தெரிவித்தார். (4)

# இந்திய கடற்படைக் கப்பல் திருகோணமலைக்கு விஜயம்



(கொழும்பு)

இந்தியக் கடற்படைக் கப்பலான "கஞ்சர்" திருகோணமலைக்கு விஜயம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இராணுவம் மற்றும் சிவில் நிர்வாகத்தின் மூத்த அதிகாரிகளுக்கு கப்பலில் வரவேற்பு அளிக்கப்படும் எனவும் அத்துடன் திருகோணமலையில் இருந்து இலங்கை கடற்படை கப்பலுடன் கடல்சார் கூட்டாண்மை பயிற்சியும் நாளை திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த கப்பலை இன்று திருகோணமலை துறைமுகத்தில் பொதுமக்களும் பார்வையிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4)

# தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

## தென்னை ஆராய்ச்சி நிறுவனம்

(கொழும்பு)

நாட்டில் தேங்காய்க்கு தட்டுப்பாடு நிலவுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தெங்கு பயிர்ச்செய்கைக்கு தேவையான உரம் கிடைக்காமையினால் தெங்கு உற்பத்தி குறைவடைந்துள்ளது.

வருடத்திற்கு 4.9 பில்லியன் தேங்காய்கள் எமது நாட்டிற்கு தேவைப்படுகின்றன.

இந்த நிலையில் உரப்பற்றாக்குறை நிவர்த்திக்கப்படாவிட்டால் தேங்காய்க்கான தட்டுப்பாடு நிலவக்கூடும் என தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (4)

# அவிசாவளையில் பாரிய தீ விபத்து

## 8 பேர் மருத்துவமனையில்



(கொழும்பு)

அவிசாவளை, சீதாவக்க ஏற்றுமதி பதப்படுத்தும் வலயத்தில் அமைந்துள்ள இறப்பர் கையுறை தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயினால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயினால் புகை மூட்டத்தினால் 8 தொழிலாளர்கள் அவிசாவளை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4)

## இலங்கை-இந்திய மீனவர் விவகாரம்

# தமிழக முதல்வர் ஸ்டாலினுடன் அமைச்சர் ஜீவன் பேச்சுவார்த்தை

(டில்லி)

மலையக தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில் அவர்களை கௌரவிக்கும் முகமாக மலையகம் - 200 விழா, இலங்கை. இந்திய மீனவர் பிரச்சினை, மலையக கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் இல்லத்தில் மரியாதை நிமித்தம் நேற்றுக்காலை நடைபெற்ற இச்சந்திப்பில், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக தமிழக அரசின் பங்களிப்பும் அவசியம் என்ற கோரிக்கையை அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்வைத்தார்.



இச்சந்தர்ப்பத்தில், கடந்த வருடம் இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடியின் போது தமிழக அரசாங்கம் இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் பாரிய அரிசி தொகையினை நன்கொடையாக வழங்கியிருந்தது. இதற்கு இலங்கை மக்கள் சார்பாக தனது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் இரு நாட்டு மீனவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சுமூக தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என முதல்வரிடம் குறிப்பிட்ட ஜீவன் தொண்டமான், இவ்விவகாரம் சம்பந்தமாக இலங்கை அமைச்சரவையிலும் பேசவுள்ளதாக அவரிடம் தெரிவித்துள்ளார். (4)

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்க தயார்

## ஜப்பான் வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

இலங்கைக்கு வருகைத் தந்துள்ள ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ஹயாஷியொஷிமாஸா தொடர்ச்சியான காலங்களிலும் இலங்கைக்கு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கை அதிகாரிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறுக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேலும் கடன் வழங்கும் அனைத்து நாடுகளையும் உள்ளடக்கிய வெளிப்படையான மற்றும் ஒப்பிடக்கூடிய கடன் மறுசீரமைப்பு செயன்முறையின் 



முக்கியத்துவம் பற்றியும் விளக்கமளித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிப்பிள்ளை தேவதுரை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் தர்ஸனின் சதத்துடன் சென்றலைட்ஸ் வெற்றி






காசிப்பிள்ளை தேவ துரை ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட தொடரின் இறதிப் போட்டி கடந்த 23 ஆம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிக்கு முன்னாள் மாநகர முதல்வர் பிரதம விருந்தினராகவும் உடற் கல்வி அத்தியட்சர் தயாளனும் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துள்ளனர்.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 233 ஓட்டங்களைப் பெற்றது. தர்ஸன் 111 ஓட்டங்களையும் சுபாஸ் 48 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ymha அணி சார்பாக ஸைஸ்வி -02, கீரன் இளங்குமரன் தலா 01 இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ymha அணி 20 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெயராஜ்-55, இளங்குமரன் -34 அருள்-30 ஓட்டங்களையும் பெற்றனர்.


பிரகாஷ், நிஸாந்தன், கவி தலா 2 இலக்கினையும் சுஸாதீஸ், தர்சன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் போட்டியின் சிறந்த வீரர்களுக்கான பரிசில்களை தர்ஸன் பெற்றுக் கொண்டார்.

40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 2 ஆவது தொடரின் சென்றலைட்ஸ் அணி காசிப்பிள்ளை தேவ துரை ஞபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளனர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2876

நிரோசிக்கா



பரீட்சை மண்டபத்தில நம்ம தோஸ்து extra paper கேட்டா நம்ம நிலைமை இப்படித்தான் இருக்கும்.

நிதுசன்

பொண்டாட்டி: என்னங்க... இன்றைக்கு யூ-டியூப் பார்த்து பிரியாணி செஞ்சிருக்கன்,.. கடைசியா தம் போட சொன்னாங்க ஒரு சிகரெட் குடுங்க...




வானுசன்

அழிந்து வரும் மாபெரும் கலைகளுள் ஒன்று



தெருக்குழாய் சண்டைகள்...

கீர்த்தி



என்ன ஒரு புத்திசாலித்தனம்...



நிகில்

மன்னா எதிரி நாட்டு மன்னன் Facebook friend reguest கொடுத்திருக்கிறான் என்ன செய்ய?





அவனை block பண்ணு அந்த நாட்டு ராணியை follow பண்ணு...

சயந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# கனடா தூதுவரின் கூற்றிலிருந்து இலங்கை பாடம் கற்க வேண்டும்

## மனோ எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

**"கனடாவில் இனவழிப்பு நிகழ்ந்ததை ஏற்கிறோம்" என்ற கனடா தூதுவரின் பகிரங்க கூற்றிலிருந்து இலங்கை பாடம் கற்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் கலந்து கொண்ட கொழும்பில் நடைபெற்ற கனேடிய தமிழர் பேரவை ஊடக சந்திப்பில் கனேடிய தூதுவர் நிகழ்த்திய உரை தொடர்பில் மனோ கணேசன் எம்.பி மேலும் கூறியதாவது.

கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ், நேற்று முன்தினம் என் பக்கத்தில் இருந்தபடி பகிரங்கமாக "கனடாவில் எங்களின் சொந்த அனுபவம் இருக்கிறது. ஆதிக்குடிகள் தொடர்பில் கனடாவில் இனவழிப்பு நிகழ்ந்ததை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

ஆதிக்குடிகளுடனான இன நல்லிணக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. அது தொடர்பில் நாம் பணியாற்றுகிறோம். அது சுலபமல்ல. அது நீண்ட பணி." என்று கூறினார். அதாவது தவறு, குற்றம் நிகழ்ந்ததை, அந்நாட்டு அதிகாரபூர்வ தூதுவர் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதிலிருந்து இலங்கை கற்க வேண்டிய பாடம் என்ன? வரலாற்றில் தவறுகள், குற்றங்கள் எங்கும் நிகழும். ஆனால் அந்த தவறுகள், குற்றங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க, முதலில் நாம் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்பதை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மன்னிப்பு கோருவது என்பது கூட இரண்டாம் பட்சம்தான் என்பது என் நிலைப்பாடு. ஆனால், முதல் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்ற உண்மை ஏற்கப்பட வேண்டும். இதுவே இன, மத, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்ற பாடத்தை கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷின் கூற்றில் இருந்து இலங்கை அரசியல், மத, சமூக தலைவர்கள் கற்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார். (4)

# 60 அடி பள்ளத்தில் கவிழ்ந்த வாகனம்

## சாரதி படுகாயம்

(கொழும்பு)

நுவரெலியா திம்புளை பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுன்ட் வேர்னன் பகுதியில் தொழிற்சாலை வாகனமொன்று 60 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று மதியம் 2 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

தேயிலை கொழுந்து மூடைகளை தோட்ட தொழிற்சாலைகளுக்கு ஏற்றிச் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த சாரதி சிகிச்சைக்காக கொட்டக்கலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திம்புளை பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

# திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை

(கொழும்பு)

ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித் துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 80 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 55 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 45 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (4)

# போலி விசா அனுமதிப்பத்திரம்; விமான நிலையத்தில் பெண் கைது

(கொழும்பு)

போலி விசா அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயற்சித்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் அவரை கைது செய்துள்ளனர்.

இதன்போது முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குறித்த பெண்ணுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரும் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (4)


# இராசிபலன்

30.07.2023
ஆடி 14, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முற்பகல் 7.32 மணிவரை
திரயோதசி பின்னிரவு 5.38 மணிவரை


மூலம் முன்னிரவு 7.54 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
பிரதோச விரதம், அமிர்தசித்தம்.

சந்திராஷ்டமம் - ரோகினி, மிருகசீரிடம்

வளவன்





வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதம் என்பன ஏற்படலாம்.




விருந்தினர்களின் சந்திப்பால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.




சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பகையொன்று நட்பாகும் வாய்ப்புண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.





புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.




கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.





உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், தேக நலனில் அக்கறை செலுத்துவீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள், போசன சுகமுண்டு.





சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




சோம்பலை விலக்குவது நல்லது, சவால்களைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் அக்கறை தேவை, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.




குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.




மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அந்நியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள் சிந்தனைக்கு விருந்தாகும் புனிதப் பொருட்கள்.

# தையிட்டி விகாரை காணி விடுவிப்பு தொடர்பில் சாதகமான முடிவு

## அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக சாதகமான முடிவு எட்டப்பட்டி ருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்துள்ளார்.



தையிட்டி விகாரையின் விகாரதிபதி ஜின்தோட்ட நந்தாராமவுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பு தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டு ள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், திஸ்ஸ விகாரை அமைக்க ப்பட்டுள்ள பகுதியில் காணப்படும் பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் தொட ர்பாகவும் பாதிக்கப்பட்ட மக்க ளின் எதிர்பார்ப்புக்களை நிறை வேற்றுவது தொடர்பாகவும் ஏற்கனவே ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இருக்கின் றேன்.

அதன் தொடர்ச்சியாக விகா ராதிபதியை சந்தித்து கலந் துரையாடியுள்ளேன். விகாரை அமைந்துள்ள பகுதியில் உள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பாக சாத கமான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ள நிலை யில், மாவட்ட கட்டளைத் தளபதி பிரதேச செயலாளர் மற்றும் நிலஅளவையாளர் ஆகியோருடன் தொலைபேசி ஊடாக கலந்துரையாடி மேற் கொள்ள வேண்டிய நடவடி க்கைகள் தொடர்பாக ஆலோ சிக்கப்பட்டுள்ளது. விரைவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சுட்டிக் காட்டியுள்ளார்.

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து விகாரை அமைக்கப் பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள், தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (4-33-104)

# மருத்துவர் ஒருவரின் வீட்டிற்குள் நுழைந்த கும்பல் அட்டூழியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கந்தர்மட த்திலுள்ள மருத்துவர் ஒருவ ரின் வீட்டுக்குள் நுழைந்த கும்பல், வீடு, தளபாடங்களை சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

கந்தர்மடம், பழம் வீதி யிலுள்ள மருத்துவ தம்பதியின் வீட்டுக்குள் நுழைந்த கும்பல் இந்த அட்டூழியத்தில் ஈடு பட்டது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த சில வாரங்களின் முன்னரும் இந்த வீட்டுக்குள் நுழைந்த கும்பல் ஒன்று அட்டூ ழியத்தில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

காணி உரிமை தொடர்பான தகராறில் இந்தத் தாக்குதல் நடத்தப்படுவதாக சந்தேகிக்க ப்படுகிறது. (4)

# பிள்ளை வரம் கேட்டு கிடைக்காததால் மாதா சிலைகளை உடைத்தேன்

## சந்தேகநபர் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

"மாதாவிடம் நேர்த்தி வைத் தும் பிள்ளை கிடைக்க வில்லை" அந்த விரக்தியி லேயே ஆணைக்கோட்டையில் மாதா சிலைகளை சேதப்படு த்தினேன் என மாதா சிலை களை சேதப்படுத்திய குற்றச் சாட்டில் கைதான சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவில் ஆறுக்கு மேற்பட்ட இடங்களில் மாதா சிலைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதி காலையில் சேதப்படுத்தப்பட்டி ருந்தன.

அது தொடர்பில் தீவிர விசா ரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார், சுதுமலை தெற்கு, சாவல்காடு பகுதியை சேர்ந்த 32 வயதான, ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில், நான் சைவ சமயத்தை சேர்ந்தவன். மனைவி கிறிஸ்தவர். இரு வரும் திருமணம் செய்து சில வருடங்களாகி பிள்ளைகள் கிடைக்காத விரக்தியில் இருந்தோம்.

அவ்வேளையில், "பிள்ளை வேண்டுமென மாதவிடம் நேர் த்தி வைத்தேன். இருந்தும் பிள்ளை கிடைக்காத விர க்தியில் இருந்தேன். இதனால், ஆத்திரத்தில் மாதா சிலை களை சேதப்படுத்தினேன்" என தெரிவித்துள்ளார். (4-33)

# யாழ்.ராணி தொடரூந்தின் ஓராண்டு பூர்த்தி விழா



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் யாழ். ராணி தொடரூந்து சேவையின் ஓராண்டு பூர்த்தி விழா நடைபெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி தொடரூந்து நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ். ராணி தொடரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்து ள்ளதை கொண்டாடும் வகையில் குறித்த நிகழ்வு கேக்வெட்டி கொண்டாடப்பட் டது. (4)

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு ரயில்சேவையை அதிகரிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பெருந்திரு விழாவை முன்னிட்டு தினசரிப் புகையிரத சேவையை முன்னெடுக்க வேண்டும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமை ச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு யாழ்ப்பாண மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரும் பிரதிக் குழுக்களின் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கோரி க்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனு ப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது.

ஓகஸ்ட் மாதம் முதல் 16 ஆம் திகதி செப்டம்பர் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள "வருடாந்த நல்லூர் திருவிழா வில்" இலங்கை புகையிரத திணைக்களத்தால் யாழ்ப்பா ணத்திற்கு விசேட ரயில் சேவை கள் வழங்கப்பட வேண்டும் என்பதை உங்கள் கவனத்தி ற்குக் கொண்டு வர விரும்பு கிறேன்.

தற்போதுள்ள அனைத்து ரயிலின் முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைகளும் இந்த காலகட் டத்தில் ஏற்கனவே முன் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த வருடாந்த திருவிழாவில் கலந்து கொள்ள விரும்பும் யாத்திரீகர்க ளுக்கு கூடுதல் ரயில் சேவை களை வழங்குவது அவசியம். சிறப்பு ரயில் சேவைகள் செயற் படும் பட்சத்தில், முன்கூட்டியே டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய வாய்ப்பு கிடைக்காத, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், புலம்பெயர் சமூக ங்களைச் சேர்ந்த பெரும்பா லான இந்து பக்தர்களுக்கு வசதியாக இருக்கும். அதே போல் இது அனைத்து வயதினரு க்கும் பாதுகாப்பான மற்றும் விலை குறைந்த விருப்பமாக இருக்கும். இத்திருவிழாவின் சமய சுற்றுலா ஊக்குவிப்பு மற் றும் யாழ்ப்பாணத்திற்கு அதிக மான பார்வையாளர்களை ஈர்ப்ப தற்கு இது ஒரு சிறந்த வழியா கும். கொரோனாவுக்கு பின்னர் இந்த ஆண்டு திருவிழா முன்பை விட பெரிய அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே வரவிருக்கும் வரு டாந்த நல்லூர் திருவிழாவிற்கு போதுமான எண்ணிக்கை யிலான சிறப்பு ரயில் சேவை ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரி விக்கப்பட்டுள்ளது. (4-33)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வார த்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81 பிறவுண் வீதியாழ்ப்பா ணத்திலுள்ள அறிவுத் திருக் கோவிலில் ஆரம்பமாகும்.

எதிர்வரும் வெள்ளிக்கி ழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியா னப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங் கப்படும். பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்து ள்ள ஞானாசிரியர் விருது பெற்ற மனவளக்கலை பேராசிரியை மு. சுபாஷினி வழங்குவார்கள்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரி விக்கப்பட்டுள்ளது. (4)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப் பிள் ளையார் கோயில் பட்டினத் தடிகள் திருநாள் பட்டினத்தார் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 1 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலய பரிபாலனசபைத் தலைவர் க. கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

# மண்வெட்டியால் தாக்கி முதியவர் படுகொலை

(கொழும்பு)

கெகிராவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கலவெவ பிர தேசத்தில் ஒருவர் மண் வெட்டியால் தாக்கப்பட்டு படு கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான நபர் அநுராதபுரம் மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழ ந்துள்ளார்.

உயிரிழந்தவர் கட்டுவல காலேவெவ, கெகிராவ பிரதேசத்தில் வசிக்கும் 64 வயதுடையவர் என தெரிவிக்க ப்படுகிறது.

உயிரிழந்தவர் தனது வீட்டிற்கு அருகில் உள்ள நெல் ஆலை ஒன்றில் தங்கியிரு ந்ததாகவும் தனிப்பட்ட தகராறு காரணமாக குறித்த பிரதேச த்தில் வசிக்கும் மேலும் இருவர் மண்வெட்டியால் உயிரிழந்த வரின் தலையில் தாக்கியுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகி ன்றது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தம் எப்படி உருவானது?

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னரான காலத்தில் தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் நாளுக்கு நாள் வலுப் பெற்றதை அடுத்து உள்நாட்டுப் போர் உருவானது.

சுதந்திரத்திற்குப் பின்னர் மொழி, பல்கலைக்கழக அனுமதி, இனக்கலவரம், தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றம் உள்ளிட்ட பிரச்சினைகள், பின்னரான காலத்தில் தமிழ், சிங்கள மக்கள் இடையே மோதல்களை உருவாக்கியது.

1956 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரிசி பங்கீட்டு முறைமை நீக்கப்பட்டமை காரணமாக, ஏற்பட்ட குழப்ப நிலையினால், அப்போதைய பிரதமராக பதவி வகித்த டட்லி சேனாநாயக்க பதவி விலகினார்.

அதனைத் தொடர்ந்து, ஆட்சி பீடம் ஏறிய எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க, 1956 ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்றதன் பின்னர், சிங்கள பண்பாட்டின் பாதுகாவலன் என தன்னை அடையாளப் படுத்திக் கொண்டார்.

இதையடுத்து சிங்கள மொழி, இலங்கையில் ஒரே ஆட்சி மொழியாகக் கொண்டு வரப்பட்டது. எனினும் நாட்டில் ஏற்பட்ட குழப்பகர நிலைமை காரணமாக 1958 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் பகுதியளவில் திருத்தப்பட்டாலும் இந்தச் சட்டமானது தமிழர்கள் மற்றும் தமிழ் சமூகத்திற்கு அழிவை ஏற்படுத்தும் சட்டமாக அவதானிக்கப்பட்டது.

தமிழர்களின் மொழி மற்றும் பண்பாட்டிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சட்டமாக இந்தச் சட்டம் கருதப்பட்டது.

இந்தச் சட்டத்தை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசுக் கட்சி அறவழிப் போராட்டத்தை நடத்தியது.

இதையடுத்து, அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவிற்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்திற்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

பண்டா - செல்வா ஒப்பந்தம் என அடையாளப்படுத்தப்பட்ட இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக பௌத்த பிக்குகள், எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தமையினால் குறித்த ஒப்பந்தம் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

தனிச் சிங்களச் சட்டமானது தமிழ் - சிங்கள மக்களிடையே இனப் பிரச்சினையை ஏற்படுத்துவதற்கான முதலாவது காரணியாக அமைந்தது என சொல்லப்படுகின்றது.

அதற்குப் பின்னரான காலத்தில் தமிழர் பகுதிகளில் சிங் களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த நிலையில், சிறுபான்மை சமூகத்திற்கு எதிரான அடக்குமுறைகள் வலுப்பெற்ற நிலையில் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்களின் தூண்டுதல் காரணமாக 1970 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழ்ப் போராட்ட இயக்கங்கள் உருவாக ஆரம்பித்தன.

நாட்டில் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியை உறுதிப்படுத்தும் வகையில் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவினால் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறையானது பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவாகும் தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்பை தட்டிப் பறிப்பதாக அமைந்தது.

இந்தச் செயற்பாடானது தமிழ் ஆயுதப் போராட்டத்திற்கு நேரடியாகவே வழிவகுத்தது என வரலாறு கூறுகின்றது.

யாழ்ப்பாணம் நகர சபை முதல்வர் அல்பிரட் துரையப்பா 1975 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டதன் ஊடாக ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது.

இந்த நிலையில் 1977ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினால் ஜே.ஆர்.ஜெயவர்தன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு புதிய அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரத்தை அறிமுகப்படுத்தினார்.

உலகிலேயே மிகவும் பெறுமதியான நூலகமாகக் கருதப்பட்ட யாழ்ப்பாண நூலகம், 1981 ஆம் ஆண்டு சிங்கள வன்முறை குழுக்களினால் எரித்து தீக்கிரையாக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் 1983 ஆம் ஆண்டு தமிழ் - சிங்கள மக்கள் இடையே இனக் கலவரம் ஏற்பட்டது.

இந்தச் சூழ்நிலையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதப் போராட்டத்தை வலுப் பெற செய்திருந்தனர்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து இலங்கை இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாக 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி இரவு, தலைநகர் கொழும்பிலுள்ள தமிழர்களுக்கு எதிராக கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

சிங்களவர்களினால் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் லட்சக்கணக்கானோர் வேறு பகுதிகள் மற்றும் வேறு நாடுகளை நோக்கி குடிபெயர்ந்திருந்தனர்.

1983 ஆம் ஆண்டு கலவரமானது விடுதலைப் போராட்டத்திற்கு தமிழர்களை அணி திரள வழிவகுத்ததாக கூறப்படுகின்றது.

அதேபோன்று, 1983 ஆம் ஆண்டு கொழும்பு - வெலிகடை சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த 53 தமிழ்க் கைதிகள், சிங்களக் கைதிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறாக தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் பல்வேறு மோதல்கள் இடம் பெற்ற நிலையில் தமிழர்களுக்கு அங்கீகாரத்தை வழங்கும் வகையில் இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்திக்கும், ஜே.ஆர். ஜெயவர்தனவிற்கும் இடையில் மாகாண சபைகளை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் 1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது.

தமிழர்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு உள்வாங்கும் வகையில் வடக்கு, கிழக்கை இணைத்து மொத்தமாக 8 மாகாணங்கள் இந்த ஒப்பந்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்டன.

இந்திய முன்னாள் பிர்தமர் ராஜிவ் காந்தி மற்றும் இலங்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன ஆகியோருக்கு இடையில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி இந்த 13 ஆவது திருத்தச் சட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.



அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையிலேயே இந்த உடன்படிக்கை அப்போது கைச்சாத்திடப்பட்டது.

இதன்படி, நாட்டில் மாகாண சபைகளை உருவாக்கும் நோக்கில் இந்த 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இந்த மாகாண சபை முறையின் ஊடாக, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபை வசமாகின்றன. எனினும் மத்திய அரசாங்கம் இன்று வரை மாகாண சபைகளுக்கு அந்த அதி காரங்களை வழங்காதிருக்கின் றது.

இலங்கையில் தமிழ் மொழி பேசும் சமூகம், நாட்டின் ஏனைய பகுதிகளில் கலந்து காணப்படுகின்ற போதிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும் பான்மை சமூகமாக வாழ்ந்து வருகின்றனர்.

இதன்படி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் வகையிலேயே இந்த 13 ஆவது திருத்தம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த திருத்தச் சட்டத்தின் ஊடாக இலங்கையில் 9 மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் இணைந்த மாகாண சபைகளாக அப்போது அறிவிக்கப்பட்டிருந்தன.

எனினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனித் தனி மாகாணங்களாக இருக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி 2006ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

இதன்படி, அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவினால் வடக்கு, கிழக்கு இணைப்புச் சட்டமானது, சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் 2007ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இரண்டாகப் பிரித்து உத்தரவு பிறப்பித்தது.

அரசியலமைப்பிலுள்ள மாகாண சபை முறைமையை அமுல்படுத்துமாறு தமிழர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வருகின்ற போதிலும் இன்று வரை அதனை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியை வழங்க மத்திய அரசாங்கம் தவிர்த்து வருகின்றது.

BBC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்-** கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில திருத்த வேலைகள் நடக்கப் போகுது போல...

**கங்காணி-** பாடசாலை திருத்தப்படுகுது தான். ஆனால் அது பாடசாலை இயங்குவதற்காக திருத்தப்படவில்லை. மாணவர் இன்மையால கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை மூடப்பட்டு இனி ஆசிரியர் வள நிலையம் அங்க இயங்கப் போகுதாம். இவ்வாறு கங்காணி கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது. அந்த அமைதிக்குள் இனம்புரியாத கவலை இருப்பதை உணர முடிந்தது.

அமைதியை ஊடறுத்து பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்-** நல்லூர் ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் நிறுவிய கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு இப்படி ஒரு நிலை வரும் எண்டு யார் நினைத்தது.

நல்லூர்ச் சூழலில 16 பரப்புக் காணியில அமையப் பெற்ற கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடர்ந்தும் இயங்க வைக்க முடியாமல் போனமை சைவத் தமிழரின் பலவீனம் எண்டு தான் சொல்ல வேண்டும்.

**மூப்பர்-** மாணவர்கள் இல்லையென்றால் என்ன தான் செய்யிறது.

**சாத்திரியார்-** எங்கட தமிழ் மக்களிண்ட சனத்தொகை கணிசமாகக் குறைந்துவிட்டது என்பது உண்மை தான்.. ஆனால் பாடசாலைகளில் மாணவர்கள் பற்றாக்குறை என்பது பிரபல மான ஒரு சில பாட சாலைகளில மாணவர்கள் குவிந்ததால ஏனைய பாடசாலைகளுக்கு மாணவர்கள் இல்லாமல் போனது என்பது தான் உண்மை.

**சிறாப்பர்-** அதெண்டால் நூறுவீதம் சரி. யாழ்ப்பாணத்தில உள்ள யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ். பொஸ்கோ வித்தியாலயம், கொக்குவில் இந்து ஆரம்பப் பாட சாலை ஆகிய மூன்று ஆரம்பப் பாடசாலைகளில மொத்தம் 3400 மாணவர்கள் கல்வி கற்கினம்.



## கந்தர்மடம் சைவப்பிரகாசத்திற்கு
## மங்களம்... மங்களம்... சுப மங்களம்

அதேநேரம் ஏனைய ஆரம்பப் பாடசாலைகளில 100,50,25 என்ற சொற்ப எண்ணிக்கையில் தான் மாணவர்கள் இருக்கினம். இந்த நிலையில ஏனைய பாடசாலைகளை கொஞ்சம் கொஞ்சமாகப் பூட்டுறதை விட வேற வழியில்ல.

**விதானையார்-** எந்தப் பெற்றோரும் தங்கட பிள்ளைகள் பிரபலமான பாடசாலைகளில படிக்க வேணும் எண்டு தானே நினைப்பினம். அவ்வாறு நினைக்கிறதை யாரும் பிழை எண்டு சொல்ல முடியாது.

இவ்வாறு விதானையார் கூறியதும் வாத்தியார் வைத்திலிங்கத்திற்குக் கோபம் வந்தது.

ஆக்ரோசமாக எழுந்தார். விதானையார் சொல்லுறது உண்மை என்பதை நாங்கள் நிராகரிக்கல்ல. ஆனால் எங்கட கேள்வி என்ன, வெண்டால், யாழ்ப்பாணத்தில குறித்த மூன்று ஆரம்பப் பாடசாலைகளில தான் மாணவர்கள் அனைவரும் படிக்க விரும்பினால் நல்லது அனுமதியைக் குடுங்கள்.

ஆனால் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையையும் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையோட சேர்த்து விடுங்கள்.

நல்லூர் ஸ்தான பாடசாலையை யாழ். பொஸ்கோ வித்தியாலயத்திற்குக் கொடுங்கள். அவ்வாறு கொடுப்பதன் மூலம் அந்த வளங்கள் மாணவர்களுக்குக் கிடைக்கும். அந்தப் பாடசாலைகளும் மாணவர்களால் நிறையும். எல்லா ஆசிரியர்களும் மகிழ்வாக தங்கட பணியை ஆற்றுவினம். அவர்களிட்டயும் ஒரு போட்டி நிலை ஏற்படும். இது ஆசிரியர்களை கற்பிக்கத் தூண்டும்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் ஆலடி சிறிது நேரம் மௌனித்தது. மௌனத்தை நீடிக்க விடாமல் தடுக்க இடையில் குறுக்கிட்ட கங்காணி கார்த்திகேயன், வாத்தியார் சொல்லுற ஐடியா நல்லது தான். ஆனால் அதை நடை முறைப்படுத்துவதற்கு சட்டதிட்டங்கள் விடுமோ.

**வாத்தியார்-** ஏன் விடாது. வடக்கு மாகாணத்துக்கென கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித்திணைக்களம் என்ற நடைமுறை இருக்குது. இது தவிர ஆளுநர், பிரதம செயலாளர் என்ற கட்டமைப்புகளும் இருக்கும் போது இந்த நடைமுறையை செய்தாக வேண்டும்.

இல்லையேல் ஒரு சிறிய இடத்தில உள்ள ஒரு பாடசாலையில குறைந்தது 1200 மாணவர்கள் கல்வி கற்கின்ற மிக மோசமான நிலை ஏற்படும்.

இந்த நிலைமை மாணவர்களுக்கும் ஆரோக்கியமல்ல. எங்கட கல்வி அபிவிருத்திக்கும் உகந்தல்ல.

**பண்டிதர்-** வாத்தியார் சொல்லுறதை நானும் ஏற்றுக் கொள்ளுறன். உண்மையில ஒரு வகுப்பறையில 4, 5 மாணவர்களுக்குக் கற்பிப்பதென்பது ஆசிரியர்களின் திறமையை மழுங்கடிக்கக் கூடிய ஒரு விடயம். ஒரு வகுப்பறையில 20, 25 மாணவர்கள் இருக்கும் போது அவர்களுக்கு படிப்பிப்பதும் அவர்களின்ர பயிற்சிப் புத்தகங் களைத் திருத்துவதும் முழுநேரக் கற்பித் தலுக்குள் ஆசிரியர்களை உள்வாங்கும். இது தான் உண்மை.

ஆனால் எங்கட வடபுலத்தில ஆரம்பக் கல்வியில ஓர் ஆசிரியர் 55 பிள்ளைகளுக்குப் படிப்பிக்க, இன்னொரு பாடசாலையில இன்னொரு ஆசிரியர் 5 பிள்ளைகளுக்குப் படிப்பிக்கிறார்.

இந்த நிலைமை இரண்டு ஆசிரியர்களையும் வெறுப்பு நிலைக்கு ஆளாக்குகுகிறது.

இந்த இரண்டு ஆசிரியர்களும் தலா 30 மாணவர்களுக்கு படிப்பிப்பார்களாயின், இரண்டு ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் தங்களை ஆர்வத்தோடு ஈடுபடுத்துவர்.

அதேநேரம் மாணவர்களின் அடைவு மட்டமும் நிச்சயம் அதிகரிக்கும்.

பண்டிதர் பரமலிங்கம் பேச்சாளர் ஜெகத்ரட்சகன் போல கொட்டி முழங்கினார்.

பண்டிதர் கூறுவதில் இருக்கக் கூடிய நியாயத்தை ஏற்றுக் கொள்வது போல ஆலடியில் இருந்த அனைவரும் மௌனமாகத் தலையசைத்தனர்.

**சிறாப்பர்-** ஓ! இப்ப பாடசாலைகளை மூடி வேற தேவைக்குப் பயன்படுத்துவது என்பது அவ்வளவு நல்ல தீர்மானம் அல்ல. உண்மையிலேயே கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை சைவ சமயத்தின் ஒரு சொத்து.

அந்தப் பாடசாலை இயங்க முடியாவிட்டால், அது ஆறுமுகநாவலரின் நினைவு மண்டபமாக அல்லது ஆறுமுக நாவலர் பயன்படுத்திய பொருட்களை, அவர் எழுதிய புத்தகங்களை பாதுகாக்கின்ற இடமாக மாற்ற வேணும். இதை விட்டிட்டு அரசாங்கம் இடம் ஒதுக்கி கட்டடம் கட்டி இயங்க வைக்க வேண்டிய நிர்வாக நடவடிக்கைகளுக்கு, சமயம் சார்ந்து பரோபகாரிகளால் வழங்கப்பட்ட காணிகளை, கட்டடங்களை வழங்குவது அவ்வளவு நல்லதல்ல. இது தொடர்பில சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில எடுக்க வேணும். இவ்வாறு சிறாப்பர் கனக சபை கூற, அதனைத் தானும் ஏற்றுக் கொள்வது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எந்த நிறமுள்ள உணவுகள் சத்துக்கள் நிறைந்தது வியாசரே?







நல்லூர் திருவிழாவில் விளம்பர துண்டுப் பிரசுரங்களில் கடவுள் படம் அச்சிடப் படுவது நிறுத்தப்படுமா?

**விஜயரட்ணம் யாழ்ப்பாணம்**

**மகாவம்சத் தலைவி குவேனி தமிழச்சி என்பது இந்தியா உள்ளிட்ட இராஜ தந்திரிகளுக்குத் தெரியுமா?**

சில விடயம் சிலருக்கு உண்மையில் தெரியாது. ஆனால் சில விடயம் பலருக்குத் தெரிந்திருக்கும். ஆயினும் அதைக் காட்டிக் கொடுக்காது கமுக்கமாய் இருந்து விடுவார்கள்.
இதில் முதலாவது ரகங்களும் உண்டு இரண்டாவது ரகங்களும் உண்டு.
எல்லாம் கடவுளுக்கே வெளிச்சம்.

**சுதன் குப்பிழான்**

**மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் பயப்படுவது ஏன் வியாசரே?**

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் உடனடியாக மாகாண அரசிற்கு அனைத்து அதிகாரங்களையும் வழங்க வேண்டும்.
தவிர, இந்தியா 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாய் அமுல்படுத்தும்படி அரசை அழுத்துகிறது.
இந்நிலையில் மாகாண சபைத் தேர்தலுக்குச் சென்றால் தமிழருக்கு காணி, பொலிஸ் அதிகாரம் கிடைத்துவிடும் எனும் பயமே தவிர வேறு எதுவும் இல்லை.
தேர்தலைத் தள்ளிப்போடுவதனூடே தமது பதவியை தக்க வைக்கலாம் எனும் குறுகிய அரசின் நோக்கமும் இதில் உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ளத் தான் வேண்டும்.

**நா.முத்துக்குமார் யாழ்ப்பாணம்**

**நல்லூர் திருவிழாவில் விளம்பர துண்டுப்பிரசுரங்களில் கடவுள் படம் அச்சிடப்படுவது நிறுத்தப்படுமா?**

நிச்சயம் நிறுத்தப்பட வேண்டிய விடயம். இதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபை தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
இப்போதே சகல தரப்பினருக்கும் அறிவித்தல்களை வழங்கி இம்முறை குறித்த விளம்பரத் துண்டுப்பிரசுரங்களில் கடவுள் படம் அச்சிட தடை செய்ய வேண்டும்.
அவர்கள் தங்கள் வியாபாரத்தை விளம்பரப்படுத்த கடவுள்களுடன் கூடிய துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு பக்தர்களிடம் வழங்க, பக்தர்களோ அதை வாசிக்காமலே எறிந்து விட்டுச் செல்ல பலர் காலில் மிதிபடுவது என்னவோ கடவுளர்களே.
இந்த கொடும் செயல் உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதை யாழ்.மாநகரசபை செயற்படுத்த வேண்டும்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுரேன் பத்தமேனி**

**தற்கால இளைஞர், யுவதிகளை தொலைபேசி கட்டிப்போட்டு விடுகிறதே?**

தொலைபேசி என்பது அத்தியாவசியத்திற்கு தேவையே தவிர, அத்தியாவசியத் தேவை இல்லை என்பதை எம் சமூகம் எப்போது புரிந்து கொள்கிறதோ அப்போதே எமக்கு விடிவு கிடைக்கும்.
ஐந்து நிமிடத்திற்கு ஒரு தடவையேனும் தொலைபேசியை எடுத்து நோண்டாவிட்டால் ஏதோ மாதிரி இருக்கும் என ஒருவர் சொல்லிக் கேட்டிருக்கிறேன்.
அவ்வாறெனின் நாம் தொலைபேசிக்கு எவ்வளவு அடிமையாகியிருக்கின்றோம் என்பதை உணர வேண்டும்.
தொலைபேசி பரிவர்த்தனை, இணைந்திருக்கும் இருவருக்குள் மாத்திரம் உண்டு என நாம் நம்புகிறோம்.
ஆனால் எமது தகவல்கள் எங்கோ ஒரு இடத்தில் சேமிக்கப்படுகின்றன என்பதை நாம் எப்போது உணரப் போகின்றோம்?

**மகாலட்சுமி கொக்குவில்**

**அண்டப்புழுகு என்றால் என்ன? ஆகாசப் புழுகு என்றால் என்ன?**

நண்பன் 1: அதோ பார் அந்த மலை உச்சியில் ஓர் எறும்பு ஊர்ந்து செல்கிறது.
இது அண்டப்புழுகு.
நண்பன் 2 : அந்த எறும்பு தனது ஒற்றைக் காலை இழுத்து இழுத்துச் செல்வதைக் கவனித்தாயா?
இது ஆகாசப் புழுகு.

**மதுவன் மீசாலை**

**அடங்காப்பிடாரி மனைவியை ஏன் அடக்க முடியாதுள்ளது வியாசரே?**

அது எப்படி ஆண்களுக்கு ஒரு சட்டமும் பெண்களுக்கு இன்னொரு சட்டமும் ஆகும்.
சட்டமென்றால் அனைவருக்கும் சமமானது தானே?
ஒரு ஆண் யாருக்கும் அடங்காமல் எவர் பேச்சும் கேட்காமல் திரிந்தால் அவன் ஆண். எதுவும் செய்யலாம். என்றால், ஒரு பெண் ஏன் தான் நினைத்த விடயத்தை சுயமாக செய்ய முடியாது. முதலில் எமது மனங்களில் மாற்றம் தேவை.
பெண் என்றால் ஆண்களுக்கு அடங்கிப் போக வேண்டும் எனும் மனநோயை சுகப்படுத்த வேண்டியது ஆண் வர்க்கமே தவிர, பெண் வர்க்கம் அல்ல.
மதுவன் இந்தப் பதிலுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எல்லாம் என் அவளின் கைவண்ணமே.

**திகான் வடமராட்சி**

**எந்த நிறமுள்ள உணவுகள் சத்துக்கள் நிறைந்தது வியாசரே?**

இயற்கையில் விளைந்த அத்தனை உணவுகளும் மனித குலத்திற்கு தீங்கு விளைவிக்காத உணவுகளே.
ஆனால் இந்த உணவு பாரம்பரியம் இப்போது எம் சமூகத்திடம் இல்லவே இல்லை.
தற்போது கொத்து ரொட்டி, பிரைட் ரைஸ், பர்கர், பீட்சா என துரித உணவுகளை உண்டு புரோயிலர் கோழி போல உருவம் கொண்டு அலைகிறது எம் இளம் தலைமுறை.
இவர்களிடம் போய் பச்சை, மஞ்சள், உணவுகளை உண்ணுங்கள் என்று கூறினால் எம்மை ஏளனம் செய்வார்கள்.
அநேகர் 32 வயதிலேயே சீனி வருத்தம், இதய வருத்தம், கொழுப்பு வருத்தம் என்று கிளினிக் வரிசையில் நிற்பது மட்டும் உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப் படம்: உலகம் சுற்றும் வாலிபன்
பாடியவர்: டி.எம்.சௌந்தரராஜன்
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
வரிகள்: வாலி



சிரித்து வாழ வேண்டும்
பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே!
உழைத்து வாழ வேண்டும்
பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே

சிரித்து வாழ வேண்டும்
பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே!

அன்பில் வாழும்
இதயம் தன்னை தெய்வம்
கண்டால் வணங்கும்
எங்கே சொல்லு!

ஆசை இல்லா மனிதர் தம்மை
துன்பம் எங்கே நெருங்கும்
பொன்னில் இன்பம் புகழில் இன்பம்
என்றே நெஞ்சம் மயங்கும்

பூவைப் போலே சிரிக்கும் உன்னைக்
கண்டால் உண்மை விளங்கும்!

சிரித்து வாழ வேண்டும்
பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே!

முள்ளில் ரோஜா மலர்ந்ததாலே
முள்ளுக்கு என்ன பெருமை
சிப்பிக்குள்ளே பிறந்ததாலே
முத்துக்கு என்ன சிறுமை!

எங்கே நன்மை இருந்த போதும் ஏற்றுக்
கொள்ளும் உலகம் அங்கே வந்து
தழுவிக் கொண்டு போற்றும் நல்ல இதயம்!

சிரித்து வாழ வேண்டும்
பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே!

வானில் நீந்தும் நிலவில்
நாளை பள்ளிக் கூடம் நடக்கும்
காற்றில் ஏறி பயணம் செல்ல
பாதை அங்கே இருக்கும்
பாதை அங்கே இருக்கும்!

எங்கும் வாழும் மழலைச் செல்வம்
ஒன்றாய் சேர்ந்து படிக்கும்
இல்லை ஜாதி மதமும் இல்லை
என்றே பாடிச் சிரிக்கும்!

# சீனா தோண்டும் படுகுழி...


பூமிக்கு அடியில் 11 கிலோமீற்றர் ஆழத்துக்கு குழி தோண்டும் திட்டத்தை சீனா தொடங்கியுள்ளது.

இந்த துளை 10 இற்கும் மேற்பட்ட பூமியின் அடுக்குகள் வழியாக சென்று பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு கிரெட்டேசியஸ் காலகட்டத்தில் தோன்றிய அடுக்குகளை அடையும் என்று சீனாவின் அரசு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் 457 நாட்களை எடுத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆபரேட்டர்கள் 2,000 தொன்களுக்கும் அதிகமான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை இந்த திட்டத்தின் போது கையாளுவார்கள்.

பூமிக்கு அடியில் 10,000 மீற்றருக்கு மேல் தோண்டப்படவுள்ள இத்திட்டம், சீனாவின் மிகப்பெரிய குழி தோண்டுதல் திட்டமாகப் பார்க்கப்படுகிறது.

சீனா தோண்டவுள்ள இந்தப் பள்ளம் தான் மனிதன் தோண்டியதிலேயே மிக ஆழமானதாக இருக்குமா என்றால் நிச்சயம் இல்லை. அந்த சாதனையை ரஷ்யாவில் உள்ள கோலா சூப்பர்-டீப் டிரில்லிங் கிணறு வைத்துள்ளது. கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் பள்ளம் தோண்டப்பட்டு 1989 இல் 12,262 மீற்றர் ஆழத்துக்கு பள்ளம் தோண்டப்பட்டது. இதுவே பூமியில் மனிதர்களால் ஆழமாக துளையிடப்பட்டது ஆகும்.



சர்வதேச அளவில் தொழில்நுட்பத்திலும் அறிவியல் சக்தியிலும் வலிமையானதாக தன்னை காட்டிக் கொள்வதில் முக்கிய நடவடிக்கைகளை சீனா எடுத்துவரும் சூழலில் இந்த முன்னெடுப்பும் தொடங்கப்பட்டுள்ளது.

சீன ஜனாதிபதியான ஷி ஜின்பிங் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பூமியின் ஆழத்தை ஆராய்வது தொடர்பான முன்னெடுப்புகளை உள்ளூர் விஞ்ஞானிகள் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியிருந்த நிலையில் தற்போது இந்த ஆழமான துளையிடும் பணியை சீனா தொடங்கியுள்ளது.

11 கிலோமீற்றர் ஆழத்தில் எண்ணெய் கிடைக்குமா?

"பூமியின் மேற்பரப்பிற்கு மிக நெருக்கமான 10 கிலோமீற்றர்களை ஆய்வு செய்ய, நில அதிர்வு டோமோகிராபி மற்றும் பிற நுட்பங்களை நாம் வழக்கமாகப் பயன்படுத்துகிறோம். இந்த வகையான திட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஏனெனில் அவை இந்த ஆய்வை வலுப்படுத்துவதற்கான ஆதாரங்களை வழங்குகின்றன" என்று சிலியைச் சேர்ந்த புவி இயற்பியலாளர் கிறிஸ்டியன் ஃபரியாஸ் தெரிவித்துள்ளார். துளையிடுதலுக்கான இரண்டாவது நோக்கத்தைப் பொறுத்த வரை, சீனாவின் வட மேற்கில் புதிய மிக ஆழமான எண்ணெய் மற்றும் எரிவாயு வயல்களை ஆராய்வதாக CNPC குறிப்பிட்டுள்ளது.

தரைப் பரப்புக்கும் அதன் அடியில் உள்ள கடினப் பாறைக்கும் இடைப்பட்ட மண் படுகையான அடி மண்ணின் தீவிர ஆழத்தில் ஹைட்ரோகார்பன் படிவுகள் (பொதுவாக 5,000 மீற்றருக்குக் கீழே) பொதுவாக சமுத்திரம் போன்ற கடல் பரப்புகளில் அமைந்திருக்கும். அதேநேரம் அவை வடிநிலங்கள் போன்ற சில நிலப்பரப்பு பகுதிகளிலும் காணப்படுகின்றன.

தக்லமாகன் பாலைவனம் அமைந்துள்ள தாரிம் படுகையின் நிலையும் இதுதான். இப்பகுதி எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் பெரிய இருப்புக்களைக் கொண்டுள்ளது.

எனினும், அதிக அழுத்தம் மற்றும் தீவிர வெப்பநிலை போன்ற கடினமான நிலத்தடி நிலைமைகளால் துளையிடுதலில் குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப சிக்கல்கள் வல்லுநர்களால் முன்வைக்கப்படுகின்றன.

முன்னாள் சோவியத் யூனியன் பூமியில் துளையிட்டு 12 கிலோமீற்றர் ஆழத்தைத் தாண்டியிருந்தாலும் பூமிக்கு அடியில் அத்தகைய குறைந்த மட்டத்தை அடைவது இன்று மிகவும் சிக்கலானதாக இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர். எது எவ்வாறோ சீனாவின் இத்திட்டத்தினால் பூமிக்கு ஏதும் ஆபத்து நேர்ந்திடாமல் இருந்தால் சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்பு பொறுக்கிகளை அடையுங்கள் சிறையில்

உயிர்கொடுத்தாய்
புகை கக்கி - எம்
சமூகத்திற்கு உரம் சேர்த்தாய்

ஐந்தல்ல, நூறல்ல,
ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட
ஊழியரை உன்னகத்தே கொண்டு
அவர் வீட்டில் அடுப்பெரிய வளிசெய்தாய்!

காங்கேசன் துறை என்றால்
சீமெந்தின் சிறந்த இடம் என்ற
நல்ல நாமத்தை நமதாக்கினாய்!

மணித்தியாலத்துக்கு ஒரு முறை
அடிக்கும் உன் விசில் - எமக்கு
மணிக்கூடின்றி வாழ்வதற்கு கற்றுத் தந்ததல்லோ!

70 களில்... 80 களில்... 90 களில்...
வீட்டில் ஒருவர் அரச தொழில்;
அது நீ போட்ட பிச்சை அன்றோ!

கீரிமலை வீதியருகே உனக்காக
தோண்டப்பட்ட பள்ளங்களில்
வயர் செருகி வெடி வைப்பார்... வெடி வெடிக்க
ஐநூறடி உயரத்திற்கு கற்கள் பறக்க...
புகை கிழப்பும்...

அந்தப் புகை மண்டலத்துக்குள்
வெடிவயர் சேகரிக்க
விசும்புக்காய் நின்ற காலங்கள்
பசுமரத்து ஆணியாய்
பசுமை நிழலாடுகிறதே!

அப்பப்பாவின் விரல் பிடித்து
பக்ரறியை பார்க்கச் சென்று
முற்றும் பார்த்து முடித்து
முன்னிருக்கும் தேனீர் கடையில்
பிளேன்ரியும் வாய்ப்பனும்
தேனாமிர்தமாய் இனித்தது அன்று!

இன்றுவரை அச்சுவைக்கு ஈடான
தேனீரும் வாய்ப்பனும்
தின்னவில்லை; தின்னப்போவதுமில்லை!

சீமெந்து பக்ரறியே!
நீ அதிகார வர்க்கத்துக்குள்
அடங்கி இருந்தபோது
அப்படியே இருந்தாய் போலும்!


இப்போ இரும்பு பொறுக்கிகளின்
கைகளுக்குள் அகப்பட்டு
நாளுக்கு நாள் கொள்ளை போகிறது
எம் பொருளாதாரத்தின்
பொன்னான சரித்திரம்!


இடுங்கள்...
எம் இதயத்தில் கைவைக்கும்
ஈனர்களை சிறைதனில்!

எம் சந்ததியை வாழவைத்த
சீமெந்து பக்ரறியை
இயங்க விடுங்கள்...
இயக்கி விடுங்கள்...

துறைகளை பதிகம்

மாவை நா.கஜேந்திரன்





"மாரி"திரைப்படத்தில் ஹீரோவுக்கும் வில்லனுக்கும் இடையேயான மோதலில்... ஹீரோவின் மாஸை உணர்த்த ஒரு காட்சியை வைத்திருப்பார்கள். "புறா" ரேஸில் வருடா வருடம் வென்றவர்களின் பெயர்களை ஒரு போர்ட்டில் எழுதி வைத்திருப்பார்கள். அதில் பல வருடங்களாக ஹீரோவின் பெயர் மட்டுமே அடுத்தடுத்து இடம்பிடித்திருக்கும். ஹீரோவை யாராலும் வெல்ல முடியாது என்பதுதான் இந்தக் காட்சியின் செய்தி. இதேமாதிரியான ஒரு சம்பவம்தான் டென்னிஸிலும் குறிப்பாக, விம்பிள்டன் போட்டிகளில். ஆனால் அந்த போர்ட்டை மாற்றியெழுத வேண்டிய கட்டாயம் இப்போது உருவாகியிருக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளாக ஃபெடரர், நடால், ஜோக்கோவிச் இந்த மூன்று பெயர்கள் மட்டுமே அந்த ஹானர்ஸ் போர்ட்டில் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. இடையில் இரண்டு தடவை மட்டும் ஆண்டி முர்ரே விம்பிள்டண் பட்டத்தை வென்றார். மற்றபடி அந்த மூவரின் ஆதிக்கம்தான். ஆனால், இந்த முறை அப்படியில்லை. ஜாம்பவான்களின் பெயரால் நிரம்பியிருந்த அந்த ஹானர்ஸ் போர்ட்டில் அல்கரஸ் எனும் 20 வயது இளைஞன் தன்னுடைய பெயரைப் பதித்திருக்கிறார். அதுவும், ஜோக்கோவிச்சை வீழ்த்தி.

90களின் கடைசி மற்றும் 2000களின் தொடக்கத்தில்தான் டென்னிஸில் இப்போது ஜாம்பவான்களாக மதிக்கப்படும் வீரர்களின் அத்தியாயம் எழுதத் தொடங்கப்பட்டது. பீட் சாம்ப்ரஸை வீழ்த்தி ஃபெடரர் தன்னுடைய ஆதிக்கத்தைத் தொடங்கினார். ஃபெடரர் கோலோச்சத் தொடங்கிய சில காலத்திலேயே, நடால் அறிமுகமாகி அவர் ஒரு பக்கம் தனி ராஜ்யத்தைக் கட்டியெழுப்பினார். ஃபெடரரும் நடாலும் ஈரெதிர் துருவங்களாக சளைக்காத போட்டியாளர்களாக டென்னிஸ் உலகின் மையமாக மாறினர். ஒட்டுமொத்தக் கதையாடலும் இவர்களைச் சுற்றியே சுழன்றது. இந்த இருவரையும் தாண்டி ஒரு வீரர் வர முடியுமா? ஃபெடரர், நடால் என்கிற பெயர்களைக் கடந்து செய்தித்தாள்களின் தலைப்புச் செய்திகள் வேறு பெயர்களைத் தாங்கி நிற்குமா என்பதைப் பற்றியெல்லாம் யாருமே யோசிக்கவில்லை. ஆனால், அது நடந்தது. ஜோக்கோவிச் புதிய புயலாக உள்ளே நுழைந்து, ஃபெடரரும் நடாலும் கட்டி வைத்திருந்த கோட்டைகள் அத்தனையையும் தகர்த்தார். ஃபெடரரை விடவும் நடாலை விடவும் அசுர பாய்ச்சலில் சாதனைகளை நிகழ்த்தினார். கிராண்ட்ஸ்லாம்

# ஒரு நாயகன்... உதயமாகிறான்!

ரேஸிலும் அவர்களுக்குப் பெரும் சவாலைக் கொடுத்தார். சமீபத்தில்தான் ஃபெடரர் ஓய்வை அறிவித்தார். நடால் காயங்களால் அவதிப்பட்டு வருகிறார். ஆனால் இன்னமும் ஜோக்கோவிச் உத்வேகம் குறையாமல் ஆடி வருகிறார். சமீபத்தில்தான் பிரெஞ்சு ஓப்பனை வென்று டென்னிஸ் வரலாற்றிலேயே அதிக கிராண்ட்ஸ்லாம்களை வென்ற வீரர் எனும் சாதனையையும் செய்திருக்கிறார் ஜோக்கோவிச்.

இப்படிப்பட்ட ஜோக்கோவிச்சைதான் விம்பிள்டன் களத்தில் வீழ்த்தியிருக்கிறார் 20 வயதே ஆன அல்கரஸ். ஸ்பெயினிலிருந்து புறப்பட்டு வந்து புது வரலாறு படைத்த நடாலின் தேசத்திலிருந்துதான் அல்கரஸும் வந்திருக்கிறார். அல்கரஸின் தந்தையும் ஒரு டென்னிஸ் வீரர். சிறுவயதிலிருந்தே டென்னிஸில் ஆர்வம் கொண்டிருந்த அல்கரஸை, ஒரு கட்டத்தில் சீனியர் அளவில் பெரிய வீரராக மாற்ற முடிவெடுத்தது அல்கரஸின் குடும்பம். ஒரு நல்ல பயிற்சியாளரைத் தேடி கார்லோஸிடம் சென்றனர். கார்லோஸும் ஸ்பெயினைச் சேர்ந்தவர்தான். டென்னிஸ் வீரரும்கூட. ஒரு கட்டத்தில் நம்பர் 1 வீரராகவும் இருந்தவர். பிரெஞ்சு ஓப்பனையும் வென்றிருக்கிறார். ஓய்வுக்குப் பிறகு பயிற்சியாளராக மாறிவிட்டார். ஆண்டி முர்ரேவுக்கும் இவர்தான் பயிற்சியாளர். அல்கரஸின் குடும்பத்தின் வேண்டு கோளுக்கிணங்க அல்கரஸுக்குப் பயிற்சியாளரானார் கார்லோஸ்.கடுமையாகப் பயிற்சியளித்து அல்கரஸையும் நம்பர் 1 வீரராக மாற்றினார். கடந்த ஆண்டு அமெரிக்க ஓப்பன் போட்டியில் கேஸ்பரூட்டை வீழ்த்தினார் அல்கரஸ். அந்த வெற்றி அவரைத் தரவரிசையின் உச்சத்தில் தூக்கி அமர வைத்தது. முதல் வெற்றி என்ற வகையில் அது அல்கரஸுக்குப் போதுமானதுதான். ஆனால், டென்னிஸ் உலகில் தன்னுடைய பெயரை அழுத்தமாகப் பதிக்க, தனி அத்தியாயத்தைத் தனக்கென எழுத அந்த வெற்றி மட்டுமே அவருக்குப் போதுமானதாக இல்லை. ஒரு பெரிய வேட்டையை நிகழ்த்தி பெரிய மிருகம் ஒன்றைச் சாய்த்தால் மட்டுமே அல்கரஸ் நினைத்தது நடக்கும் என்ற சூழலில்தான் இந்த விம்பிள்டன் தொடரின் இறுதிப்போட்டி கூடி வந்தது.

துரத்தலில் மான், புலியை வென்றால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இருந்தது இந்தப் போட்டி. முதல் செட்டை சிரமமே-படாமல் ஜோக்கோவிச் வென்றார். அப்படியே அடுத்த இரண்டு செட்களையும் வென்று நேர் செட் கணக்கில் ஜோக்கோவிச் வெல்லப் போகிறார் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகவும் இருந்தது. ஆனால் மெதுவாகத் தொடங்கி வேகமெடுக்கும் ரயில் எந்திரத்தைப் போல அல்கரஸ் வேகமெடுக்கத் தொடங்கினார். அடுத்த இரண்டு செட்களையும் வென்று கடைசி செட்டையும் வென்று ஜோக்கோவிச்சை வீழ்த்தித் தன்னுடைய அத்தியாயத்திற்கான சரியான தொடக்கத்தைப் பொன்னெழுத்துகளால் எழுதினார். அல்கரஸ், தொடக்கத்திலிருக்கும் அதே வீரியத்தை அப்படியே தக்கவைத்து நீடித்து நின்று சாதிப்பாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனை தந்த பனை வளர்ப்போம்



ஈழ மண்ணின்
எல்லைக் காவலாம்
கற்பகத்தரு
பனை வளம்
பாதுகாப்போம்
பனை வடலிகள்
பசும் தோலை ஆகி
பத்து விரல் அழகில்
பயன் தந்தறிவோம்
பசி தீர்த்த நாளறிவோம்
நீரூற்றி வளர்த்தோமா?
நீர் காத்து நீரும் இனிதாக
வார்த்தமை அறிவோம்
கார்மேகம் பொழிந்திட
காற்றில் கற்பகத்தரு
காற்றும் ஈர்ந்தது
போற்றுவோம் பனை தனை

தமிழினியன்.

# விழித்தெழு

மனிதன் அவன் துணியாவிட்டால்
மனுக் குலத்திற்கு விடிவில்லை என
மாண்புள்ளோர் பலர் சொல்லக் கேட்டும்
மானிட மகன் மீண்டும் வந்து
மனுக் குலத்தைக் காப்பார் என
மடத்தனமாய் உளறும்
மானிடர் உள்ளவரை
எத்தனை யுகம் கடந்தாலும்
மனித குலத்திற்கு விடிவில்லை
ஆதலால் மானிடனே
மடத்தனத்தை மூட்டை கட்டு
விழிப்புடன் துணிந்து போராடு
விடிவு நிச்சயம்

கி.இளமதி,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



# பிச்சைக்காரன்

கடலடி ஆழத்தின் அவதானிப்புக்கள்
கார்மேக முகில் தாண்டி முன்னேற்றங்கள்
பக்கி நிறை படலங்கள் -ஊரெங்கும்
பெருவிழாப் பாட்டொலிகள்
சொற்சுவை தேன் பாயும் இருந்தும்
சொந்தங்கள் ஏதும் இன்றி எம் இடர் காயும்
பிச்சைக்காரன் என்பதால்
பட்டினியால் எம் உயிர் போகும்

கையேந்தி காசு கேட்பதனால் - எமைக்
கடைந்தெழுத்து நன்றாய் கருத்திடுவீர்
கை கால் இருப்பதனால்-இவர்
கவலைக்கிடமாய் இல்லை என்பர்
காத்திருந்த கனிகளும்
காவியம் எழுதிய கைகளும்
வலுவிழந்து இங்கே
வேதனையில் துடிக்கின்றது

விதி தந்த வேதனையை
விலை பேசும் தமிழினமே
நெஞ்சில் துளை - நஞ்சின் நிலை
நெருப்பின் கருக்கல் நரம்பில் சறுக்கல்-இவை
உமக்காய் எரிந்த சுடரென-உங்கள்
உள்ளம் உணரும் நாள் வரைக்கும் -நாங்கள்
உங்கள் ஊர் பிச்சைக்காரர்



சாந்தையூர் வினிஸ்,
பண்டத்தரிப்பு.

## மௌனத்தின் தேடல்- 679



# தாய் மனது

வாயக் கட்டி
வயித்த கட்டி கஷ்டப்பட்டு
பிள்ளைகளை வளர்த்து
படிக்க வைக்கினம்
படிச்சுப்புட்டு பிள்ளைகள் எல்லாம்
காதல் பண்ணுது
பெற்றோர் மனது நோகும் எண்டு
கடவுளுக்குத்தான் வெளிச்சம்மா
இரா.ஜெ.துஷ்யந்தா.மாதகல்.

# தாய்மையின் சிறப்பு

பத்து மாதம் கருவறையில் சுமந்து
பக்குவமாய் பத்தியமும் காத்து
பாரினிலே உன்னைப் பிரசவித்த போது
பாசத்துடன் கட்டியணைத்து
பாசமழை பொலிந்த போதினிலே
தாய்மை என்னும் சிறப்பினை
தாயுள்ளம் உணர்ந்ததுவே
விலை மதிப்பில்லா பொக்கிசம்
தாயன்பும் அரவணைப்புமே
ஆ.செல்வி, திருநாவலூர்.

# நானும் நீயும்

என் வீட்டில்
தொட்டிலும் இல்லை
தாலாட்டும் இல்லை
அம்மாவும் அருகில் இல்லை
நான் புட்டிப்பால் குழந்தை
நீ அன்புத் தாயும்
முத்தம் பெறும்
கொடுத்து வைத்த குழந்தை
பி.யதுர்சன்.
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# கண்கொள்ளாக் காட்சி

அம்மாவின் அன்பு முத்தம்
கண்ணத்தில் பதியும் போது
நீ கண் மூடி உணரும் காட்சி
எமக்கு கண்கொள்ளாக் காட்சி
பி.மதுஷ்சன், தையிட்டி.

## மௌனத்தின் தேடல்- 680



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# தாய்மைக்கு வலி ஏது

கருவாகி வயிற்றினுள்
பத்துத் திங்கள் சுமையாகி
வலியெடுத்து வேதனை உற்று
மழலையாய் மலரும் போது
பாசம் தீரிட அள்ளி அணைத்து
முத்தமிட்டு பாலூட்டும்
தாய்மையிடம் சுமையும்
பிரசவ வலியும்
தோற்றுவிடும்
சி.இ.அன்புதுரை.
சம்மட்டியோலை. மானிப்பாய்.

# முல்லைச் சிரிப்பு

அன்புத் தாயவள் முத்த மழைதனில் நனைந்த- சேயவள்
மலர்ந்தும் மலராத றோசா மலரின் சின்ன
இதழ்களில் முகிழ்ந்த முல்லைச் சிரிப்பினால்
காண்பவர் மனங்களை பரவசப்படுத்தும் தங்கப் பதுமை
[illegible] கொக்குவில்.

# தாயுமானவன்

உறவுப் பிறப்புடன்
உணர்வுகள் தொடர்கதை
உறங்கும் வேளையிலும்
உருகி மெய் மறப்பது
தூய அன்பின் வலிமையை
உலகிற்கு உணர்த்தும்
இறைவன் எங்கும்
நீக்கமற நிறைந்து
நிலைத்திருப்பதை
நினைவூட்டத்தான்
தாயையும் படைத்ததால்
தாயுமானவன் ஆயினன்
க.நாகராசா, நுணாவில்.

# புது அனுபவம்

அன்புத் தாயே! நீ உன் குழந்தைக்கு இப்படி
முத்தமிடுதல் அதற்கு ஒரு
புது அனுபவமாக
உள்ளது
சுப்பிரமணியம் ஜெயரூபன்.
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல்புறா

## அவள் அறிந்த இரகசியம்

மஞ்சளழகிக்குப் படுக்கும் அறை மாளிகையில் தனியே இருந்தாலும் அந்த அறைக்குப் போகாமல் இந்த இரவு முழுவதும் பஞ்சணையிலேயே படுத்துக் கிடந்தாள். தந்தை கூறிய பல விஷயங்கள் மனக்கூடத்திலேயே எழுந்து போராட, திரும்பத் திரும்ப நினைத்த விஷயங்கள் சிந்தையில் உலாவி வர, பஞ்சணையில் புரண்டாள் அவள். நித்திரையின்றி அப்படிப் புரண்டவளின் மனநிலை, பொழுது விடிந்ததும் பெரும் குழப்பத்திலிருக்கவே அந்தக் குழப்பத்தை நீக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் பல் துலக்கி முகம் கழுவிச் சிறிது பாலை மட்டும் பருகி விட்டு மாற்றுடை அணிந்து மாளிகையை விட்டு வெளியே நடந்தாள். எங்கு செல்ல வேண்டும் என்ற நிர்ணயமில்லாமல் கால் சென்ற வழியே நடந்த மஞ்சளழகி கடைசியில் கடற்கரைக்கே வந்து சேர்ந்தாள். அவள் கால்கள் தான் காரணமின்றி அவளை அங்கு இழுத்து வந்தனவா அல்லது அவள் மனம்தான் கால்களை அந்தக் கடற்புறத்துக்குத் திருப்பிவிட்டதா என்பதை எண்ணியும் விளங்காத சிந்தையுடன் கொள்ளையர் குடிசைகளை நாடிச் சென்றாள் மஞ்சளழகி. செல்லும் வழியில் ஒரே ஒரு விநாடி மட்டும் நின்று இளையபல்லவனின் மரக்கலத்தை ஏறிட்டு நோக்கினாள் அவள். அடுத்த விநாடி அந்த மரக்கலம் இருந்த திசைக்கு நேர் எதிர்த் திசையில் நடந்தாள் அவள். எந்தக் காரணத்தை முன்னிட்டும் அன்று இளையபல்லவன் கண்களில் படக்கூடாதென்று உறுதி கொண்ட மஞ்சளழகி, கடற்கரையில் கிழக்குக் கோடியில் இருந்த யவனர்கள் குடிசைகளை நோக்கி வேகமாக நடந்தாள். அந்தக் குடிசைக் கூட்டத்தின் யவன மாலுமிகளின் தலைவனின் குடிசைக்குள் நுழைந்து அங்கிருந்த துணைவியின் உதவியால் நீராடும் இடையாடையும் மேலாடையும் அணிந்த மஞ்சளழகி தன் இதய தாபத்தையும் அதனால் ஏற்பட்ட உடல் வெப்பத்தையும் தணித்துக் கொள்ளக் கடலில் நீராடும் நோக்கத்துடன் கடலலைகள் தரை மீது மோதிக் கொண்டிருந்த இடத்தை அடைந்தாள். அவள் போகும் நிலையைப் பார்த்த யவன கொள்ளைக்காரர்களும் அவர்கள் துணைவிகளும் அவள் முகத்திலிருந்த ஏக்கத்தையும் கண்களில் சிவப்பையும் கண்டு அவளை அணுகாமல் எட்டவே நின்றார்கள். அப்படி எட்ட நிற்காமல் விசாரிக்க அருகில் வந்த ஓரிரு கொள்ளைக்காரர்களைக் கையால் விலக்கி விட்டு நீர்க் கரையை நோக்கிச் சென்ற மஞ்சளழகி படகுகளோ வலைஞரோ இல்லாத தனி இடமாகப் பார்த்துக் கடல் நீரில் இறங்கி அலைகளில் மூழ்கினாள். அவள் அழகிய உடலை அலைகள் ஆசையுடன் தூக்கி தூக்கிப் புரட்டிக் கொடுத்தன. அவள் அலைகளில் நீந்திச் சென்றாள். கடலின் அலைக் கரங்கள் அவள் உடல் அசதியைப் போக்கப் பிடித்துப் பிடித்துச் சுழன்றன.

அலைகள் எழுப்பிய காற்றின் சத்தமும் அவள் சித்தத்தின் குழப்பத்தைத் துடைத்துச் சுத்தம் செய்தது. காலை வெயில் கிளப்பிய இதமான உஷ்ணம் கூட அவளுக்குப் பெரும் சாந்தியை அளித்தது. எந்தத் துன்பத்தையும் குழப்பத்தையும் துடைக்கும் இயற்கையின் இணையிலாச் சக்தியை எண்ணி அவள் வியப்பெய்தினாள். அந்த வியப்புடனும் மனச் சாந்தியுடனும் ஓரளவு மகிழ்ச்சியுடனும் நீண்ட நேரம் அலைகளில் திளைத்து விளையாடிய மஞ்சளழகி, ஓர் அலையில் புரண்டு கரைக்கு வந்து தன்னிரு கால்களையும் தரையில் ஊன்றி எழுந்து நின்றாள்.

"இனி நான் என் வாழ்வைப் பற்றி நிதானமாக யோசிக்க முடியும்." என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு அலைகள் காலில் திரும்பத் திரும்ப நுரையைப் பாய்ச்ச நீர்க்கரையோரமே நடந்து சென்றாள்.

(தொடரும்...)


## நான் வைரமுத்து பேசுகிறேன்... 16

# எனது பார்வையில் கண்ணதாசன்

யாப்பிலக்கணத்தின் மற்ற இயல்புகளை விட அவர் ஒழிபியலையே அதிகம் உபயோகப்படுத்தினார்.

சின்னச் சின்ன சில்லறைப் பிழைகளை வைத்து என்னை விமர்சிக்காதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்தார்.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வானொலியில் அவரோடு கலந்துரையாடிய சம்பவம் ஒன்று என் கவனத்துக்கு வருகிறது.



அந்நிகழ்ச்சியில் அவருடைய வெண்பா ஒன்றைச் சுட்டிக்காட்டி வினாவெழுப்பினேன்.

**"சின்னஞ்சிறு வயதில் தேர்ந்த உணர்வினுக்கே என்ன பொருள்**
**என்றே நான் இன்றுணர்ந்தேன் அந்நாளில்**
**முத்தென்று சொல்லுதிர்த்த மோகக் கவிதை எழில்**
**சித்திரத்தால் பாராமல் சென்றாள்."**

இந்த வெண்பா "சென்றாள்" என்று முடிகிறது.

ஒரு வெண்பா நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாடுகளுள் ஒன்றால் முடிய வேண்டுமென்பதே இலக்கணச் சட்டம்.

ஒரு வெண்பாவின் இலக்கணம் மட்டும் எந்த விதிகளோடும் சமரசம் செய்து கொள்வதில்லை. அப்படியாயின், இந்த வெண்பா "சென்று" என்றோ "செல்" என்றோ முற்றுப் பெற வேண்டுமேயன்றிச் "சென்றாள்" என்று முற்றுப் பெறுவது இலக்கணத்திற்கு முரணாகும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று அன்று கேட்டேன்.

உடனே அவர் உதடுகளில் உற்பத்தியாகும் புன்னகையை மறைத்துக் கொண்டே "பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையாரும் எனக்குச் சுட்டிக்காட்டினார். கவிதையின் அழகுக்காக விட்டு விட்டேன் என்று புலவர் விடையிறுத்தார்.

இலக்கணத்திற்காக கவிதையின் அழகைக் காவு கொடுப்பதை விட கதையின் அழகுக்காக இலக்கணக் கோடுகளை அகலப்படுத்திக் கொள்வது பிழையன்று என்பது கண்ணதாசனின் எண்ணமாகும். அனுபவங்களே கண்ணதாசனின் அஸ்திவாரங்கள். தனது கண்ணீரை, தனது சுகத்தை, தனது சோகத்தை, தனது ரணத்தை, தனது காமத்தை, தனது கோபத்தைப் பொது உணர்ச்சிகளாகப் பழுக்க வைத்ததே அவருடைய பாடல்கள்.

எந்த அனுபவம் அவரைப் பழுக்க வைத்ததோ அந்த அனுபவம் முற்றி முதிர்ந்த போது அந்தக் கனி வாழ்க்கை, மரத்திலிருந்து தனது காம்பினைக் கழற்றிக் கொண்டது.

ஒன்று கேள்விப்பட்டிருக்கிறேன். உயிருள்ள ஆமைகளின் ஓடுகளைவதற்காக அவற்றைக் கொப்பறைத் தண்ணீரில் வைத்துக் கொதிக்க வைப்பார்களாம். என்ன நேரப் போகிறது என்பதை அறியாத ஆமைகள் இளஞ்சூடு ஏறுகிற போது அந்தக் கதகதப்பில் சுகம் கண்டு சொக்குமாம். தண்ணீர் கொதிக்கத் தொடங்குகிற போது ஆமைகளுக்கு அந்தச் சுகமே மரணமாகி விடுகிறது. வாழ்க்கையில் அனுபவங்களும் அப்படித்தான்.

எந்த அனுபவங்கள் எழுத்துக்கு வார்த்தைகளை இழுத்து வந்தனவோ, எந்த அனுபவங்கள் கற்பனைக்குச் சிறகுகளைக் கட்டி விட்டனவோ, எந்த அனுபவங்கள் இதயத்தில் ஓர் உலராத ஈரத்தை உற்பத்தி செய்து வந்தனவோ, அந்த அனுபவங்களே ஒரு கவிஞனின் உயிரைத் தவணை முறையில் உறிஞ்சி விடும் என்பதற்குக் கண்ணதாசன் ஒரு சாகாத சாட்சி என்றே நான் சத்தியம் செய்ய முடியும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

358

வலம்புரியின் மருத்துவச்சுடர்



## தொடர்ச்சியான மருந்துப் பாவனை இலகுவானதா?

நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், வலிப்பு, நரம்புத்தளர்ச்சி போன்ற நோய்களுக்கு நீண்ட காலம் மருந்து பாவிக்க வேண்டி இருக்கின்றது.

ஆனால் கணிசமான எண்ணிக்கையான நோயாளிகள் மருந்துகளை ஒழுங்காகப் பாவிப்பதில் கவனக் குறைவாக இருக்கின்றனர். இதற்கான முக்கிய காரணங்களாவன.

மருந்துகளின் அவசியத்தை உணராமை, நோயாளியின் குடும்ப உறுப்பினர்கள் கவனயீனமாக இருத்தல், மருந்து பாவிக்கும் முறை பற்றியும், அதன் அவசியம் பற்றி உரிய விளக்கம் அளிக்கப்படாமை, வைத்தியசாலையில் இல்லாத மருந்துகளை வெளியில் வாங்கும் பொழுது அதிக செலவாகின்றமை, பெண்களுக்கு குடும்பச் சுமை அதிகமாக இருத்தல், மருந்துகளை ஒழுங்காகப் பாவிக்காமல் விடுவதால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாகும்.

உதாரணமாக: நீரிழிவுக்குப் பாவிக்க வேண்டிய மருந்து ஒன்றைப் பாவிக்காமல் விடுவதால் நீரிழிவு கட்டுப்பாட்டுக்கு வருவதில்லை.

நோயைக் கட்டுப்படுத்துவதற்காக வைத்தியர் மருந்துகளின் அளவைக் கூட்ட நேரிடுகிறது. இதனால் நோய் குணமடையாமல் விடுவதோடு மருந்துகளின் பக்கவிளைவுகளினால் நோயாளி பாதிக்கப்படுகின்றார். இதைத் தடுப்பதானது நம் அனைவரினதும் கரங்களிலேயே உள்ளது. இதனைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம்?

பாவிக்கும் மருந்துகளின் அவசியத்தையும் அவை ஒவ்வொன்றையும் என்ன அளவுகளில் பாவிக்க வேண்டும் என்பதையும் வைத்தியரிடம் இருந்து அறிந்து கொள்ள வேண்டும். நோயாளி தானாக இவற்றைச் செய்ய முடியாதவராயின் நோயாளியின் குடும்பத்தினரோ அல்லது உறவினரோ இவற்றைப் பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வகையான மருந்துகளையும் தனித்தனியே சிறிய போத்தல்களில் போட்டு, போத்தலில் மருந்தின் பெயரையும் பாவிக்கும் அளவையும் குறித்து வைக்க வேண்டும், அடுத்த தடவை மருந்தாளரிடம் போத்தல்களைக் கொடுத்து மருந்தைப் பெற்றுக் கொள்ளலாம், வைத்தியசாலையில் இல்லாத மருந்துகளை வெளியில் வாங்கும் போது விலை அதிகமாக இருப்பின் ஒரே தடவையில் நீண்ட காலத்திற்கு மருந்துகளை வாங்காமல் குறுகிய இடைவெளியில் மருந்துகளை வாங்கலாம். ஒவ்வொருநாளும் குறித்த நேரத்திற்கு மருந்துகளை உட்கொள்ள வேண்டும். குறித்த ஒரு நோய்க்குப் பல இடங்களில் வைத்தியம் செய்வதைத் தவிர்த்தல் அவசியமானது.

மருந்துகளினால் பக்கவிளைவுகள் உருவாகுமிடத்து தன்னிச்சையாக மருந்துகளைப் பாவிக்காமல் விடுவதை விட வைத்தியருடன் கலந்தாலோசித்து வேறு மாற்று மருந்துகளைப் பாவிக்கலாம்.

மேற்சொன்ன விடயங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் மருந்துகள் ஒழுங்கீனமாகப் பாவிப்பதைத் தவிர்க்கலாம். ஒரு நோயாளி மருந்துகளை ஒழுங்காகப் பாவிப்பது நோயாளி, வைத்தியர், மருந்தாளர், தாதியர், முக்கியமாகக் குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரிலும் தங்கியுள்ளது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மருந்துகளைப் பாவிப்பது கடினமான விடயம் என்றால் பிழையாகாது. அது எவ்வளவு கடினமானதோ அவ்வளவும் முக்கியமானதும் ஆகும்.

Dr.S.வருண்பிரசாந்
வைத்திய நிபுணர்.

## கேள்வி: கர்ப்பிணித் தாயாகிய நான் எனது உடல் நிறையைப் பேணுவது முக்கியமானதா?

**பதில்:** கர்ப்பிணித் தாய்மார்களும் உடற்பருமன் பற்றி அக்கறை கொள்வது முக்கியமானதாகும்.

உடற்திணிவுச் சுட்டி அதிகரிக்கும் போது ஆபத்தான சிக்கல் நிலைகள் தாய்க்கும் சிசுவிற்கும் ஏற்படும் வாய்ப்பும் அதிகரிக்கிறது. உடற்திணிவுச் சுட்டி 35 இலும் கூடியவர்கள் மகப்பேற்றில் நிபுணரின் நேரடி கவனிப்பிற்குட் படுத்தப்பட வேண்டியவர்களாவர்.

சுவாசப்பை மற்றும் கால்களிலுள்ள நாளங்களில் குருதி உறைதல் இந்த நிலை மரணத்திற்கு இட்டுச் செல்லலாம். கர்ப்ப கால நீரிழிவு - உடற் பருமனானோர் சாதாரண உடல்நிறை கொண்டவர்களை விட மூன்று மடங்கு கூடிய வாய்ப்புக் கொண்டவர்கள், கர்ப்ப கால உயர்குருதி அழுத்தமும் சிறு நீரில் புரதம் வெளியேறலும் (PRE-ECLAMPSIA)

உடற்பருமனான தாய் பெற்றெடுக்கும் சிசு பின்வரும் பாதிப்புகளை எதிர் நோக்கலாம்.

சிசுவின் நரம்புத் தொகுதிப் பாதிப்புக்கள், கருச்சிதைவு - உடற்பருமனானோரில் 25 வீதமானோர் கருச்சிதைவுக்கு உட்படுகின்றனர், உடற்பருமன் கூடிய சிசுவை ஈன்றெடுத்தல் (4 Kg இலும் கூடிய)- இது தாயின் பிறப்பு வழிச்சேதம், சிசுவின் நரம்புத் தொகுதி பாதிப்பு என்பவற்றை ஏற்படுத்தும், சிசு இறந்து பிறத்தல் அல்லது பிறந்தவுடன் இறத்தல் - சாதாரண உடல்நிறை கொண்ட தாய்மாரை விட உடற்பருமனானோரில் இரு மடங்கு அதிகம், பிள்ளையும் உடற் பருமனாதல் மற்றும் நீரிழிவு நோய்க்குட்படும் வாய்ப்பு அதிகம்.

**உடற்பருமனாதலால் பிள்ளைப் பேறின் போது ஏற்படும் ஆபத்துக்கள்.**

குறைமாத/முதிராக் குழந்தைப் பேறு, நீண்ட நேரப் பிரசவம், சிசுவின் நரம்புத் தொகுதிப் பாதிப்பு, அவசர சிசேரியன் சத்திரசிகிச்சையும் ஆபத்தான பின் விளைவுகளும், சத்திரசிகிச்சைக் காயத்தில் கிருமித் தொற்றேற்றப்படல், மயக்க மருந்தூட்டலில் ஏற்படும் ஆபத்தான சிக்கல் நிலைகள், குருதிப் பெருக்கு.

**கர்ப்ப காலத்தில் ஏற்படும் உடற் பருமனாதலை தவிர்க்கும் முறைகள்**

1. போசாக்கான உணவு -தானிய உணவு, கிழங்கு வகை, அரிசி போன்ற மாப்பொருள் உணவு, பிரதான உணவு மற்றும் இடை உணவு வகைகளை முறைப்படுத்தல், கொழுப்பு மற்றும் எண்ணெய் கூடிய உணவு, அதிக எவு சீனி சேர்த்த உணவு ஆகியவற்றைக் குறைத்தலும் நிறுத்தலும்.

நார்ச்சத்துக் கொண்ட உணவுகளான அவரை, பழங்கள், காய்கறிகள், முழுத்தானியம், தீட்டாத அரிசி ஆகியவற்றை அதிகம் பயன்படுத்தல், உணவு உண்ணாது விடுதல், விரதமிருத்தல் என்பவற்றைத் தவிர்த்து மூன்று வேளையும் முக்கியமாக காலை உணவை உண்ணுதல் வேண்டும்.

2. உடற்பயிற்சிமேற்கொள்ளல் நடத்தல், துவிச்சக்கரவண்டி ஓடுதல், நீந்துதல், தோட்ட வேலை, மாடிப் படி ஏறுதல் நல்ல உடற் பயிற்சிகளாகும். இவற்றை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும். உடல் உழைப்பில்லாத நீண்ட நேர வேலைகளைத் தவிர்த்தல் (தொலைக்காட்சி பார்த்தல்), உடற்பயிற்சியை 15-30 நிமிடங் கள் ஒவ்வொருநாளும் ஒழுங்காக மேற்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
யோ.சிவாகரன்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார பகிர்வை மேற்கொள்ள பொருத்தமான நேரம் இதுவல்ல

## சரத் பொன்சேகா



(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டில் அதிகார பகிர்வு நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும். நாட்டில் சுமுகமான நிலை இருக்கும்போதே இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனை மேற்கொள்ள சரியான நேரம் இதுவல்ல என எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சர்வகட்சி மாநாட்டில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. எவ்வாறு அதிகாரப் பகிர்வை மேற்கொள்வது? அல்லது எந்த சந்தர்ப்பத்தில் அதை செயற்படுத்துவது என்பது தொடர்பில் சிந்தித்து, நிதானமாக செயற்பட வேண்டிய தருணத்தில் இருக்கிறோம்.

நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். அதுவே எனது நிலைப்பாடாகும். நாட்டில் சுமுகமான நிலை இருக்கும் போதே இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாட்டில் நெருக்கடி நிலை காணப்படும் போது இவ்வாறான பிரச்சினைகளை எடுத்துக் கொள்ளும் போது இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் தரப்பினர் பலர் உள்ளனர். அது அவர்களுக்கு சாதகமாக மாறிவிடும். இதற்கு முன்னரும் இவ்வாறு இனவாத செயற்பாட்டை கொண்டே சிலர் ஆட்சிக்கு வந்தனர். இதனை செய்வதற்கு சரியான நேரம் இதுவல்ல என நான் நினைக்கிறேன். இருப்பினும் அதற்கான நியாயம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (4)

# தாயை அடித்து கொன்ற தந்தையும் தனயனும் கைது

(கொழும்பு)

பதுளை, ரிதிமாலியத்த பிரதேசத்தில் 50 வயதுடைய பெண்ணொருவர் அடித்துக் கொல்லப்பட்டதுடன் சடலம் தோட்டத்தில் புதைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவர் மற்றும் மூத்த மகன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண் கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் காணாமல் போயுள்ளதாக சந்தேகநபர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய, சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, அவர் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களுக்கும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் இடையில் வாக்குவாதம் முற்றி கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேகநபரான கணவர் மனைவியை தாக்கிவிட்டு பின்னர் மூத்த மகனின் உதவியுடன் சடலத்தை தோட்டத்தில் புதைத்துள்ளதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். (4)

# கொழும்பில் வாகன விபத்து தந்தை, மகள் உயிரிழப்பு

(கொழும்பு)

வாகன விபத்தில் தந்தையும் மகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு - கடுவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

லொறியும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கோர விபத்தில் ஓட்டோவைச் செலுத்திச் சென்ற 48 வயதுடைய தந்தையும் அதில் பயணித்த 22 வயதுடைய மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

லொறியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

# ரணிலை இரகசியமாக சந்தித்த மொட்டுக்கட்சி எம்.பிக்கள்

(கொழும்பு)

புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் நோக்கத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் நிமல்லான் சாவுடன் பாராளுமன்றத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் 5 கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில், கலந்துரையாடலில் ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து செய்தி வெளியாகியுள்ளன.

மேலும், அடுத்த ஆண்டு ஜனவரியில் இவர்களின் புதிய அரசியல் கூட்டணி ஆரம்பிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய கூட்டணியில் சேர்வதற்கு லான்சாவுடன் பல கட்சிகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவற்றுள் மொட்டுக் கட்சியின் பிரதிநிதிகளும் அடங்குவதாக குறித்த அரசியல் வட்டங்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தனர்.

இதுவரையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சுமார் 11,000 முறைப்பாடுகள் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பணியாளர்கள் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

அதற்குரிய தீர்வுகளை விரைவில் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன்போது, அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு அவசியமான வழிகாட்டல் கோவை ஒன்றை விரைவில் பெற்றுத் தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி, அதனூடாக ஆணைக் குழுவிற்கு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கான இயலுமை தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி தெஹிதெனிய மற்றும் ஏனைய உறுப்பினர்களான பேராசிரியர் தையமுத்து தனராஜ், பேராசிரியர் பாதிமா பர்ஸானா ஹனீபா மற்றும் நிமலசேன கார்திய புந்திஹேவா உள்ளிட்டவர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (4)

# அரச வைத்தியசாலைகளில் மின் துண்டிக்கப்படமாட்டாது

## மின்சார சபை உறுதி

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கு எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது என இலங்கை மின்சார சபை உறுதியளித்துள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் விசேட வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

சுகாதார அமைச்சருக்கும் இலங்கை மின்சார சபை தலைவருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இணக்கப்பாடு எட்டப்பட்டதையடுத்து இந்த உறுதிமொழியை உறுதிப்படுத்தும் கடிதத்தை இலங்கை மின்சார சபை வழங்கியுள்ளதாக சமன் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நிலுவையிலுள்ள மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதற்கு திறைசேரியால் 120 மில்லியன் ரூபாய் சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கைந்து மாதங்களாக அரச வைத்தியசாலைகளின் மின் கட்டணத்தை சுகாதார அமைச்சினால் செலுத்த முடியவில்லை.

எவ்வாறாயினும், அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நிலுவையிலுள்ள கட்டணங்களை செலுத்துவதாக உறுதியளித்ததையடுத்து, அரச வைத்தியசாலைகளுக்கான மின் இணைப்பைத் துண்டிக்காமல் இருப்பதற்கு இலங்கை மின்சார சபை ஒப்புக் கொண்டது. (4)

# பாதாள உலகக் குழுவை சேர்ந்த மூவர் கைது

(கொழும்பு)

டுபாயில் இருந்து போதைப் பொருள் வலையமைப்பை நடத்தும் பாதாள உலக தலைவரின் முக்கிய உதவியாளர் ஒருவரை கலால் திணைக்களம் கைது செய்துள்ளது.

40 கிராம் ஹெரோயின், வெளிநாட்டு துப்பாக்கி மற்றும் 3 ரவைகளுடன் அவர் கைது செய்யப்பட்டதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த நபருடன் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அத்திணைக்களத்தின் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி அனுரகுமார அலுத்கே தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# பாரிய எரிபொருள் மோசடி கையும் களவுமாக சிக்கிய கும்பல்

(கொழும்பு)

எரிபொருள் தாங்கிகளை பயன்படுத்தி எரிபொருளை எடுத்து, அதேயளவு மண்ணெண்ணெய் கலந்து விற்பனைக்கு விநியோகிக்கும் பாரிய மோசடி கும்பலை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாபிம பகுதியில் உள்ள இரகசிய இடமொன்றிற்கு எரி பொருள் தாங்கிகளை கொண்டு சென்று எரி பொருளை கலக்க முற்பட்ட சமயம் பொலிஸார் சந்தேகநபர்களை சுற்றிவளைத்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மஹர நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சபுகஸ்கந்த பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

# இரு தமிழர்கள் இடையே போட்டி நிலவ வாய்ப்பு

## அரசியல் வல்லுநர்கள் ஆரூடம்

(வோஷிங்டன்)

**2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கமலாஹரிஸ், விவேக் ராம சாமி ஆகிய இரு தமிழர்களிடையே கடும் போட்டி நிலவலாம் என அந்நாட்டு அரசியல் வல்லுநர்கள் தெரிவித்து வருகின்றனர்.**




உலகிலேயே மிகவும் அதிகாரமிக்க பதவி எது என்றால்? அது அமெரிக்க ஜனாதிபதி பதவிதான். வல்லரசு நாடுகளின் முதன்மையான அமெரிக்காவின் ஜனாதிபதிக்கு இருக்கும் சலுகைகள், அதிகாரங்கள், பாதுகாப்புகள் போன்றவை உலகின் மற்ற எந்த நாட்டு தலைவருக்கும் இருக்காது.

உதாரணமாக அமெரிக்க ஜனாதிபதியை கைது செய்ய முடியாது. அமெரிக்க ஜனாதிபதியின் உத்தரவை நிறைவேற்ற அந்த நாட்டு படைகள் எப்போதும் தயாராக இருக்கும். அப்படிப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் 2020 ஆம் ஆண்டு நடைபெற்றது. அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறும் தேர்தலுக்கு இப்போதே ஆரம்ப கட்ட பணிகள் தொடங்கி விட்டன. ஆளும் கட்சியான ஜனநாயக கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோபைடன், ராபர்ட் கென்னடி, மரியன்னா வில்லியம்சன் ஆகியோர் போட்டியிட உள்ளனர். அதில் ஜோபைடனுக்கு 80 வயது ஆகி விட்டதால் அவருக்கு பதிலாக, தற்போது துணை ஜனாதிபதியான கமலா ஹாரிஸ் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட வேண்டும் என்ற குரல் ஒலிக்க தொடங்கி உள்ளது.

இவர் போட்டியிட்டால், அவருக்குத்தான் அதிக ஆதரவு இருக்கிறது. எனவே கமலா ஹாரிஸ் தான் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என்று அரசியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

குடியரசு கட்சி சார்பில் கடந்த முறை ஜனாதிபதியாக இருந்த டொனால்ட் ட்ரம், பர்கம், கிறிஸ்டி, விவேக் ராமசாமி, டிசாண்டிஸ், நிக்கி ஹாலே, உட்பட 13 பேர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட உள்ளனர். அதில் டொனால்ட ட்ரம், விவேக் ராமசாமி இடையே தான் கடுமையான போட்டி இருக்கும் என்று அரசியல் வல்லுநர்கள் கணித்து உள்ளனர்.

டொனாலட் ட்ரம் மீது குற்றவியல் வழக்குகள் இருப்பதால் விவேக் ராமசாமிதான் குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளர் என்று அங்கிருக்கும் ஊடகங்கள் சொல்ல தொடங்கி உள்ளன. அதன்படி ஜனாதிபதி தேர்தலில், ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிசும் குடியரசு கட்சி சார்பில் விவேக் ராமசாமியும்தான் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி ஒரு சூழ்நிலை வரும்பட்சத்தில் அமெரிக்க ஜனாதிபதிக்கு போட்டியிடும் 2 தமிழர்கள் என்று சொல்லலாம். அதற்கான சாத்தியக்கூறு அதிகம் உள்ளது. (4)

# சிரியாவில் குண்டுவெடிப்பு ஆறுபேர் உயிரிழப்பு

## பலர் படுகாயம்



(சிரியா)

சிரியாவில் அதிகம் பார்வையிடப்பட்ட ஷியா புனித யாத்திரை தளமான சயீதா ஜெய்னாப் கல்லறைக்கு அருகே வெடிகுண்டு வெடித்ததில் ஆறுபேர் கொல்லப்பட்டனர்.

மற்றும் ஏராளமானோர் காயமடைந்தனர் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏழாம் நூற்றாண்டில் நடந்த போரில் முகம்மது நபியின் பேரனான இமாம் ஹுசைன் இறந்ததை ஷியாக்கள் நினைவு கூரும் போதே குண்டுவெடிப்பு இடம் பெற்றது.

இதன்போது டாக்ஸி அருகே மோட்டார் சைக்கிள் வெடித்ததில் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இது "பயங்கரவாத குண்டு வெடிப்பு" என்று உள்துறை அமைச்சகம் கூறியது. (4)

# அந்தமான், நிக்கோபார் தீவுகளில் நிலநடுக்கம்

அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள போர்ட் பிளேர் அருகே நேற்று காலை 5.9 மெக்னிடியூட் அளவிலான நில நடுக்கம் பதிவாகியுள்ளதாக இந்திய தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தின் மையம் போர்ட் பிளேயரில் இருந்து 126 கி.மீ தென்கிழக்கே இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நிலநடுக்கம் இந்திய நேரப்படி அதிகாலை 12:53 மணிக்கு மேற்பரப்பில் இருந்து 69 கி.மீ ஆழத்தில் ஏற்பட்டது.

தெற்காசியா பகுதியில் அண்மைய காலங்களில் சிறியளவு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளில் உள்ள நிலநடுக்கவியல் துறைகள் இந்த நில அதிர்வு நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக தெரிவித்துள்ளன. (4)

# ஆங் சான் சூகிக்கு மீண்டும் காவல்



(ரைபிடோ)

மியன்மாரின் முன்னாள் தலைவர் ஆங் சான் சூகி மீண்டும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை சுமார் ஒரு வருட காலம் தனிமைச் சிறை முகாமில் அடைக்கப்பட்டிருந்த ஆங் சான் சூகி தற்போது அரசாங்க கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். மேலும் ஆங் சான் சூகியின் உடல் நிலை தொடர்பான சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அவரை வீட்டுக் காவலில் வைக்க மியன்மார் இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# பிலிப்பைன்ஸ் நாட்டில் படகு கவிழ்ந்ததில் 30 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் பினன்ஹொன் நகரில் இருந்து ஏரி வழியாக தலிம் தீவிற்கு பயணிகள் படகு ஒன்று பயணம் மேற்கொண்டது. இந்த படகில் சுமார் 70 பயணிகள் வரை பயணித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏரியில் படகு சென்று கொண்டிருந்த போது திடீரென பலத்த காற்றுடன் கனமழை பெய்துள்ளது. இதனால், பயணிகள் அனைவரும் படகின் ஒரு பக்கத்தில் குவிந்துள்ளனர்.

இதனால், படகின் எடை ஒரு பக்கத்தில் அதிகரித்ததால் நிலை தடுமாறிய படகு ஏரியில் கவிழ்ந்ததில் பயணிகள் அனைவரும் ஏரியில் மூழ்கினர்.



இந்த விபத்து குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். ஆனால் இந்த விபத்தில் 30 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்து குறித்து அந்நாட்டு பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் 42 பேர் பயணிக்கக்கூடிய படகில் 70 பேர் பயணித்ததும் பயணிகள் யாரும் உயிர்காக்கும்கவச உடை அணியவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு எறும்புகளைப் போல உபதேசிப்பவர் யாருமில்லை. ஆனால் எந்த எறும்புகளோ பேசுவதில்லை. ~ ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அவர்கள் யார் என்பதை காட்டிய சர்வகட்சி மாநாடு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டிய சர்வகட்சி மாநாடு வழமைபோல தோல்வியில் முடிந்துபோனது.

இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாயினும் அதற்குள் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் நிறையவே உண்டு.

ஆம், இந்த நாடு இத்துணை தூரம் பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டு, உலக நாடுகளிடம் பிச்சை எடுக்கின்ற நிலைமைக்கு ஆளாகியபோதிலும் அவர்கள் தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வையும் தரமாட்டார்கள் என்பதே யதார்த்தம்.

அதிலும் ஆட்சித் தரப்பில் இருப்பவர்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கூறுவர். ஆனால் ஏனைய சிங்களக் கட்சிகள் அதற்கு எதிராக வாதம் செய்யும்.

சிலவேளை இப்போது ஆளுங்கட்சியாக இருப்பவர்கள் தேர்தலில் தோல்வியுற்று எதிர்க்கட்சியாகிவிட்டால், அவர்களும் தீர்வுத் திட்டத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பர். இதுவே இந்த நாட்டின் பண்பாடாயிற்று.

ஆக, இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற நினைப்பு சிங்களவர்களிடம் இருக்கும்வரை, தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் கிடைக்கமாட்டாது என்பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற மனநிலை சிங்களவர்களிடம் இருந்து மாறப் போவதுமில்லை.

ஏனெனில் அவர்களின் உபதேசம் முழுவதும் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதுதான்.

இந்த உபதேசம் பௌத்த விகாரைகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

இதுதவிர, வரலாறு சார்ந்த பாடப் புத்தகங்களில் இலங்கைத் தமிழர் வரலாறு அடியோடு மறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆட்சி அதிகாரம் முழுவதும் சிங்கள மயமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வரலாறுகளைத் திரிவுபடுத்தியும் இலங்கையின் ஆட்சி என்பது பௌத்த சிங்களவர்களுக்குரியதென்பதான உபதேசமும் சேர்ந்து சிங்கள மக்களை இன மத பேதமைக்குள் வீழ்த்தி விட்டுள்ளது.

அதிலும் சிங்கள மாணவர்களிடையே இந்த இனவாத சிந்தனை ஆழமாக விதைக்கப்படுகின்றமையால், இலங்கைத் தீவில் இருந்து பௌத்த பேரினவாதத்தை ஒருபோதும் நீக்க முடியாது.

அதேநேரம் எங்கள் தமிழ் அரசியல் தரப்புகளும் தங்களின் சுயநலம் கருதி சிங்களத் தரப்புகளுக்கு விசுவாசமாக நடந்து கொள்கின்ற துர்ப்பாக்கிய நிலைமையும் உண்டு.

இங்கு நாம் குறிப்பிடுகின்ற தமிழர் தரப்பு என்பது அரசாங்கத்துடன் சேர்ந்து நிற்கின்ற தமிழ் அரசியல் தரப்புகளை மட்டுமல்ல.

மாறாக தமிழர்களின் உரிமைக்காக... என்று மார்தட்டுகின்ற அரசியல் தரப்புகளையும் உள்ளடக்கியது என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

## மீண்டும் செயலிழந்தது குமுதினி படகு சேவை தொடர்ந்து தாமதம்

திருத்த வேலைகளின் பின்னர் நெடுந்தீவு பயணிகளுக்காக மீண்டும் நேற்று சேவையில் ஈடுபட தயாராக இருந்த குமுதினி படகு இயந்திரக் கோளாறு காரணமாக மீண்டும் செயலிழந்துள்ளது.

திருத்த வேலைகளின் பின்னர் படகு சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நிகழ்வு குறிக்கட்டுவான் இறங்குதுறையில் நேற்று காலை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பங்கேற்புடன் நடைபெறவிருந்த நிலையில் படகில் மீண்டும் கோளாறு ஏற்பட்டுள்ளது.

யாழ்.குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு பயணிகளுக்கான கடல்வழிப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட குமுதினி படகு அடிக்கடி செயலிழந்த நிலையில் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் திருத்தப் பணிகளுக்காக நிறுத்தப்பட்டு.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் குமுதினி படகின் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் படகை கடலுக்குள் இறக்குவதற்காக நடவடிக்கை அண்மையில் முன்னெடுக்கப்பட்டு படகிற்கான பரிசோதனை செய்து ஐந்து தடவை பரீட்சார்த்தமாக இயக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியான நிலையில் நிகழ்வு ஆரம்பமாக சில மணிநேரம் முன்பாக குறித்த படகு இயக்கப்பட்டு குறிக்கட்டுவான் இறங்குதுறைக்கு கொண்டுவரும் போது இயந்திர கோளாறால் செயலிழந்தது.

எனினும் அதனை இயக்குவதற்கான பகீரத பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டபோதும் அம்முயற்சிகள் கைகூடவில்லை.

இதேவேளை படகின் செயலிழந்த இயந்திர பகுதி திருத்தபணிக்காக நீர்கொழும்புக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பணிப்பாளர் குரூஸ் தெரிவித்ததுடன் எமது திணைக்கள நிபுணத்துவ குழுவின் பரிசோதனைக்கு பின்னரே மீண்டும் படகு சேவை ஆரம்பிக்கும் என்றார்.

குமுதினி படகு 1968 ஆம் ஆண்டு முதல் யாழ் - நெடுந்தீவிற்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியராக பதவி உயர்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரையே பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த மனித வள முகாமைத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தனேஸ்வரி இரவீந்திரனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்று பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி தனேஸ்வரி இரவீந்திரன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ம-7)

## வவுனியாவில் விபத்து; ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் குடியிருப்பு வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளும் பெரும்சேதமடைந்துள்ளது.

பூந்தோட்டம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி சென்று கொண்டிருந்த ஹயஸ் வாகனத்துடன் எதிரே வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7.299)

## 150 அடி பள்ளத்தில் பாய்ந்து உழவு இயந்திரம் விபத்து
### சாரதி உயிரிழப்பு

பத்தனை மவுண்ட் வேர்ணன் மத்திய பிரிவு தோட்டத்தில் உழவு இயந்திரம் வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் சாரதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மவுண்ட் வேர்ணன் மத்திய பிரிவு தோட்டத்தில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் மவுண்ட்வேர்ணன் தோட்டத்தைச் சேர்ந்த சாரதியான எட்வட் (வயது - 48) 3 பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கீழ் பிரிவிலிருந்து தோட்ட தொழிற்சாலைக்கு தேயிலைக் கொழுந்தையும் விறகையும் ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் மலையில் பாதையில் மத்திய பிரிவு பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த சாரதி டிக்கோயா கிளாங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.(ம-7)

## கடல் ஆமையுடன் மன்னாரில் ஒருவர் கைது

மன்னாரில் வீடொன்றில் கயிற்றால் கட்டி உயிருடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 160 கிலோ கிராம் எடை கொண்ட அரிய வகை கடல் ஆமையை கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து மீட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனங்கட்டிக் கொட்டுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடலாமை மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினருக்கு இரகசிய தகவல் வழங்கப்பட்டது.

குறித்த தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினர் உரிய அதிகாரிகளுடன் சென்று குறித்த ஆமையை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கடலாமை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கடலாமையின் உடலில் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதால் அதற்கு சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுத்ததாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கடலாமையை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த வீட்டின் உரிமையாளர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,285)

## யானை தாக்கியதில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் வெவ்வேறு இடங்களில் காட்டு யானை தாக்கி இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

கிண்ணியாகலை - கெஹெல்எல்ல பிரதேசத்தில் நேற்று மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

அம்பாறை - பரகஹகலே பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, ஹந்துங்கொட - ஹிம்பிலியாகொட பகுதியில் சைக்கிளில் பயணித்த 69 வயதுடைய நபர் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினமும் வெவ்வேறு இடங்களில் காட்டு யானைகள் தாக்கி மூவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆம் திகதிக்கு பின் ரூபாய் வலுப்பெறும்

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதி முதல் டொலருக்கு நிகராக இலங்கை ரூபாயின் பெறுமதி மீண்டும் அதிகரிக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

வழங்கல் மற்றும் தேவைக்கு ஏற்ப டொலர் வீதத்தை தீர்மானிக்க அரசாங்கம் அனுமதித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

சமீபகாலமாக ரூபாய் மதிப்பில் ஏற்பட்டுள்ள ஏற்ற இறக்கத்திற்கு முற்றிலும் டொலர் பரிவர்த்தனையே காரணம் என்றும் அவர் கூறினார்.

கடந்த மூன்று நாட்களில் ரூபாய் மதிப்பு மீண்டும் உயர்ந்துள்ளது என்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்தவுடன் ரூபாயின் மதிப்பு மீள அதிகரிக்கும் என தெரிவித்தார்.

உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் இருந்து இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருவதாக ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். (4)



கலாசார அலுவலகள் திணைக்களத்தின் நூலக அபிவிருத்தி மற்றும் இலக்கிய, கலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திற்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஒரு தொகுதி நூல்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்: சபேசன்)

# நலன்புரி கொடுப்பனவை பெறவுள்ள பயனாளிகள் வங்கிக் கணக்கை திறக்கவும்

## மன்னார் அரச அதிபர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நலன்புரி நன்மைகள் சபையின் கொடுப்பனவை பெற்றுக் கொள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் உடனடியாக வங்கிக் கணக்கை ஆரம்பித்து சமர்ப்பிக்குமாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நலன்புரி நன்மைகள் சபையின் கொடுப்பனவை பெற்றுக் கொள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் நேற்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வங்கி கணக்குகளை திறக்க முடியும்.

இன்று ஞாயிறு மற்றும் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விடுமுறையாக உள்ள போதும் வங்கிகள் விசேடமாக திறக்கப்படும்.

கொடுப்பனவை பெற்றுக் கொள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி,தேசிய சேமிப்பு வங்கி,பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிக்க முடியும்.

எனவே தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் குறித்த வங்கிகளில் ஏதாவது ஒரு வங்கியில் வங்கிக் கணக்கை திறந்து சமர்ப்பிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (4-285)

# தீர்வு கிடைக்காவிடின் வடக்கு-கிழக்கை இந்தியாவுடன் இணைக்க வேண்டும்



(கொழும்பு)

தமிழர்களுக்கான தீர்வு கிடைக்கவில்லை என்றால் வடக்கு-கிழக்கினை இந்தியாவின் ஒரு பகுதியாக இணைக்க வேண்டும். அதன் மூலமே தமிழர்களின் இறையான்மையினை பாதுகாக்கமுடியும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.

சிங்களவர்கள் தமிழர்களின் இரத்தத்தினை குடிக்கும் நோக்குடன் மட்டுமே செயற்படுகின்றனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டை வலுப்பெறச்செய்ய வேண்டும் என்பதை சிந்திக்காது, தமிழர்களை எவ்வாறு முடக்குவது என்றுதான் அரச தலைவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள் என குறிப்பிட்டார்.

பல வேற்றுமைகள் இருந்தாலும் எமது மக்களுக்காக நாம் ஒற்றுமைப் பட வேண்டும் என்றும் இந்த ஒற்றுமை புலம்பெயர் தேசத்து கட்டமைப்புகளும் ஒன்றுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

உதட்டளவில் தேசியம் பேசாமல் அனைவரையும் ஒன்றிணைக்கின்ற செயற்பாட்டை தமிழீழ விடுதலை இயக்கம் செய்யும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (4)

# மடு திருத்தல ஆவணி திருவிழா முன்னாயத்த கலந்துரையாடல்

(மன்னார்)

மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியை இம்முறை திருத்தந்தையின் பிரதிநிதி பேரயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மடு திருத்தலத்தின் ஆவணி மாதத்திருவிழாவுக்கான முன்ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர், குரு முதல்வர், மடு திருத்தல பரிபாலகர், அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள், பாதுகாப்பு தரப்பினர் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெற இருக்கின்றது.

இம்முறை ஆவணி மாத திருவிழாவிற்கு வழமையை விட சுமார் 7 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மடு திருத்தலத்தில் உள்ள வீடுகள் அனைத்தும் முன்பதிவு செய்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையினால் வருகின்ற திருப்பணிகளுக்கு வீடு வழங்க முடியாத நிலை உள்ளது.

எனினும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடாரம் அமைத்து மடு திருவிழாவில் கலந்து கொள்ள நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எதிர்வரும் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆயத்த நவ நாட்களை ஆரம்பிக்கின்றோம்.

அதனைத்தொடர்ந்து ஆவணி 14 ஆம் திகதி மாலை வேஸ்பர் ஆராதனையும் 15 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும்.

பெரும் எண்ணிக்கையான மக்களை நாங்கள் எதிர்பார்ப்பதினால் நேர காலத்துடன் ஆலயத்திற்கு வருமாறு வேண்டுகின்றோம்.

பாதுகாப்பு காரணங்களை கருத்தில் கொண்டு இடம் பெறுகின்ற சோதனை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலும் நேரத்துடன் வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இம்முறை திருவிழா திருப்பலியை தலைமை தாங்கி நடத்த திருத்தந்தையின் பிரதிநிதி பேரயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை அவர்களை அழைத்துள்ளோம்.

இம்முறை தமிழ், சிங்களம், ஆங்கிலம், லத்தீன் ஆகிய மொழிகளில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

எனவே மடு திருவிழாவை ஒரு பொழுதுபோக்காக கருதாமல் ஆன்மிக ரீதியில் பக்தியுடன் பங்கெடுக்க வேண்டும். உங்களுடைய ஒத்துழைப்பு எங்களுக்கு மிக மிக அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-285)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 500 | 400 |
| தக்காளி | 400 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 200 | 300 |
| கோவா | 250 | 200 | 280 | 220 |
| கரட் | 400 | 540 | 520 | 600 |
| பூசணி | 140 | 140 | 100 | 150 |
| புடோல் | 120 | 80 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 160 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 280 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 130 | 180 |
| பாகற்காய் | 350 | 300 | 400 | 400 |
| வெண்டக்காய் | 200 | 100 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 350 | 150 | 200 |
| லீக்ஸ் | 250 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 300 | 220 | 300 |
| கறிமிளகாய் | 350 | 300 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 600 | 350 | 350 | 300 |
| போஞ்சி | 450 | 400 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 240 | 200 |
| கீரை – 1 பிடி | 80 | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 300 | 100 | 480 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 350 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 150 | 300 | 200 | 300 |
| முள்ளங்கி | 120 | 80 | 130 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 40 | 40 | 50 |
| ஈரப்பலா | 180 | 160 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

குறித்த இளைஞன் தோட்டம் செய்து வரும் பகுதியிலிருந்து 100 மீற்றர் தொலைவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் சடலத்தின் கழுத்துப் பகுதியில் துப்பாக்கி சூட்டு காயத்தின் அடையாளம் காணப்படுவதுடன் கட்டுத் துப்பாக்கி ஒன்றும் குறித்த இளைஞரது மோட்டார் சைக்கிளும் அருகில் காணப்பட்டது.

குறித்த சம்பவம் தற்கொலையா அல்லது வேறு பகுதியில் யாரேனும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்து விட்டு குறித்த பகுதியில் சடலத்தை வைத்துள்ளனரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பட்டம் பெற்று...

ளார்.

இந்த சம்பவமானது நேற்று முன்தினம் இரவு வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் மத்திய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சுழிபுரம் மத்திய பகுதியைச் சேர்ந்த சற்குணரத்தினம் கௌசி (வயது-26) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த யுவதி சப்ரமுகவ பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

இந்நிலையில் பட்டமளிப்பு விழா முடிந்து நேற்று முன்தினம் பெற்றோருடன் அவர் சுழிபுரத்தில் உள்ள வீட்டுக்கு வந்துள்ளார்.

இந்நிலையில் தந்தை வெளியில் சென்ற நிலையில், தாயார் வீட்டு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இதன்போது குறித்த யுவதி தூக்கில் தொங்கியுள்ளார்.

இதனை அவதானித்த தாயார் அவரை மீட்டு சங்கானை பிரதேச வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவம் குறித்து மரண விசாரணைகளை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம், உடற்கூற்று பரிசோதனைக்காக சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

தாய் மற்றும் தந்தை ஆகியோர் இருவரும் தங்களுக்குள் தொடர்ந்து முரண்பட்டு வரும் நிலையில் மன விரக்தி அடைந்த யுவதி உயிர் மாய்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,33,104)

## வாகன இறக்கு...

தார்.

வாகன இறக்குமதியின்போது நாட்டுக்கு பொருத்தமற்ற வாகனங்களை இறக்குமதி செய்ததன் மூலம் பெருமளவிலான வெளிநாட்டு பணம் நாட்டை விட்டு வெளியேறியதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இனிவரும் காலங்களில் தவறை சரி செய்ய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (ம-7)

## பொருளாதார...

ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினார்.

ஒரு மணித்தியாலம் பதினைந்து நிமிடங்கள் நீடித்த இந்த கலந்துரையாடலில் நட்புரீதியான மற்றும் பயனுள்ள இருதரப்பு விடங்கள் குறித்து பேசப்பட்டுள்ளது.

சர்வதேச தொடர்புகளில் பிரான்ஸின் ஈடுபாட்டிற்கு பாராட்டு தெரிவித்த ஜனாதிபதி, காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்தல், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு மற்றும் இந்து - பசுபிக் வலய பிரச்சினைகள் தொடர்பில் வழங்கப்படும் ஒத்துழைப்புக் களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அண்மையில் பிரான்ஸில் நடைபெற்ற புதிய உலகளாவிய நிதி இணக்கப்பாட்டிற்கான மாநாட்டின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தான் நடத்திய கலந்துரையாடல் தொடர்பில் ஜனாதிபதி மக்ரோன் நினைவு கூர்ந்தார்.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்பதாக அவர் மீண்டும் உறுதியளித்திருந்ததோடு இலங்கையின் நான்காவது பெரிய கடன் வழங்குநர் என்ற வகையில் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு தனது ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

பிரான்ஸ் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கிளிநொச்சியில்...

பகுதியில் இருந்து அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றி பயணித்த இரண்டு டிப்பர் வாகனங்களும் அதன் சாரதிகள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சுண்டிகுளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் 11 முதிரை மரக்குற்றிகளை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.(ம-7)

## வாள்வெட்டு...

அதிகாலை இரண்டு மோட்டார் சைக்கிளில் முகத்தை மறைத்தவாறு வந்த நால்வர் தாக்குதல் நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

இதன்போது வீட்டின் தளபாடங்கள் மற்றும் ஜன்னல்கள் என்பவற்றை உடைத்து சேதமாக்கி உள்ளதுடன் தங்கி இருந்த மாணவன் ஒருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. (ம-7)

## தேசிய நல்லிணக்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையாலும் கனடாவை போல அதிகளவு சாதிக்க முடியும்,கனடா தன்னை இருமொழி நாடாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முன்னிறுத்தியுள்ளது என எரிக்வோல்ஸ் தெரிவித்துள்ளார்.

கனடாவின் வாழ்க்கை பெருமளவிற்கு ஆங்கில பிரெஞ் ஆகியவற்றை கொண்டதாக காணப்படுகின்றது தமிழ் மொழியும் பயன்படுத்தப்படுகின்றது கனடா தன்னை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தன்னை இவ்வாறே முன்னிறுத்துகின்றது இலங்கை உடனான உறவுகளிலும் இது குறித்தே கவனம் செலுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடா சுதேசிய மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயல்கின்றது கனடாவில் இனப்படுகொலை இடம்பெற்றதை ஏற்றுக் கொண்டுள்ளோம் இது மிகவும் நீண்டகால நடவடிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் இதனை சாதகமான அம்சங்கள் சாதக தன்மைகளுடன் முன்னெடுக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடா ஒரு சிறந்ததேசமாக விளங்குவதற்கு இலங்கை தமிழர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பை அவர் பாராட்டியுள்ளார். (ம-7)

## யாழ்.மாநகர...

யாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம விருந்தினராகவும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன், ஐபிசி தமிழ் குழுமத்தின் தலைவர் க.பாஸ்கரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்

மேற்படி விழா நிகழ்வில் இயல், இசை, நாடகத் துறைகளில் பெரும் பங்காற்றிய மூவர் யாழ்.மாநகர சபையின் உயரிய விருதான "அரசகேசரி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்

இதேவேளை எம் மண்ணில் இன்றைய சூழலில் உயர்கல்வியும், மனித நேயம், கலாசார பண்பாடுகளும் எனும் தலைப்பில் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவரும், சைவத் தமிழ் அறிஞருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனை நடுவராகக் கொண்ட பிரபல பேச்சாளர்கள் பங்கேற்ற பட்டிமன்றமும் இடம்பெற்றது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

மெகா பவர்
திகதி 29/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1538
W 16 08 18 35 72
29268

தன நிதானய
திகதி - 2023.07.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1220
S 48 57 63 71 S
12402

Lucky 7
திகதி 29.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 016
L7 இலக்கம் 1 4
வெற்றி இலக்கினம்: மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 6 6 1 6 0 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3432
சீட்டிழுப்பு திகதி 29.07.2023
I 03 33 51 65
I
54891

ஹதஹன (HANDAHANA)
சீட்டிழுப்பு திகதி 2023.07.29
சீட்டிழுப்பு இலக்கம் 499
மீனம் 17 37 38 44 மீனம்

மஹஜன சம்பத
திகதி 2023/07/29
சீட்டிழுப்பு இலக்கம் 5190
R 0 4 1 8 7 7

Super Ball
சீட்டிழுப்பு வாரம் 2164 — வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.29 — தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 21 33 36 57 F
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 58,052,116.40
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 01 06 07 62 I

சனிதா
திகதி 2023.07.29 — வெற்றி வாரம் 4325 — வர்ணம் இளம் பச்சை
06 12 34 45 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,614,972.00
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 47 64 68 69 L

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3876 — வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.29 — தினம் சனிக்கிழமை
09 32 34 53 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,380,300/-
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 23 28 45 55 துலாம்

அத கோடீபதி (ADA KOTIPATHI)
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 1990
வர்ணம் : மஞ்சல்
சீட்டிழுப்பு திகதி : 2023.07.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000/-
06 17 33 69 J
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 09 61 65 73 U

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவனங்களுக்கு ஏற்ற இடங்கள் வாடகைக்கு உண்டு

நிறுவனங்களுக்கு ஏற்ற
வாகன தரிப்பிட வசதிகளுடன்
கூடிய 750 சதுர அடி மற்றும்
500 சதுர அடி விசாலமான
அலுவலக இடங்கள்
வாடகைக்கு உண்டு.
(யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அருகில்)
(C-6978)

**070 366 3600**

## விற்பனையாளர்கள் தேவை

எமது ஜவுளி நிறுவனத்திற்கு வியாபாரம் பழகிய/ பழக
ஆர்வம் உள்ள ஆண்/ பெண் விற்பனையாளர்கள் தேவை.
**சென்னை பெசன் வேல்ட்**
**61, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.**
(16567)

## IELTS CLASSES

கொழும்பு பல்தலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH *Special offer for all the courses*
- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
(16505)
**T.P : 077 780 3970, 074 007 1970**

## பாஸ்போட்

ஒன்லைன் முற்பதிவு
செய்து தரப்படும்.
ஒரு பதிவுக்கு 500/-
(C-6977)
**076 037 3294**

## வீடு விற்பனைக்கு

கரணவாய் கிழக்கு கரவெட்டியில்
3 பரப்பு 1 குளியில் 5 அறைகள், 3
கோல் உடன் நல்ல நிலையிலுள்ள
வீடு உடன் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு -
(16379)
**077 484 3332**

## Vacancy For Montessori Teacher

ஆங்கில மொழி மூல (English Medium) Montessori யில்
பணிபுரிவதற்கு சிறுவர்களையும்,
ஆசிரிய தொழிலையும்
நேசிக்கும் ஆசிரியர் தேவை.
(16553)
**076 402 9397**

## மணமகன் தேவை

தமிழ், RC பெற்றோர், 1985,
சிரேஷ்ட விரிவுரையாளர் (கலாநிதி/
Doctorate - PhD in Medical Science)
மகளுக்கு Doctor/ Lecturer
மணமகனை எதிர்பார்க்கின்றனர்.
(16598)
**077 251 7450**
proposal4750@gmail.com

## A/L Online Classes

**Tamil/English Medium**
**Biology, Chemistry**
Conducted by Lecturer
(16549)
**077 807 5566**

## வாடகைக்கு

இருபாலையில் 2 Rooms,
kitchen உடன் Annex
வாடகைக்கு உண்டு.
அறைகளாகவும் தரப்படும்.
தொடர்புகளுக்கு
(16552)
**075 949 3509**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன்
துறையில் 9 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.
துறைமுக சந்தியில் இருந்து
1 km தூரத்தில்
(16554)
**074 234 3241**

## WORK IN UK

**WORK PERMITS**
**CIVIL ENGINEERS**

CIVIL ENGINEERING சம்மந்தமான DEGREE ,DIPLOMA படித்து
CIVIL ENGINEERING துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு
பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்
- ✔ 5 YEAR WORK PERMITS
- ✔ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- ✔ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

(C-6980)
CIMS COLLEGE **0777-068-777**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு


வயது :-30 வயதிற்குட்பட்டோர்
(இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு
முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-6980)

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=
(16349)
**T.P:077 544 8503**



## JOIN THE LOLC WORLD

FOR A GLOBAL MINDSET

LOLC
பினான்ஸ்

## WALK – IN – INTERVIEWS

சவாலான பணி சூழலில் சந்தைப்படுத்தல் பணியில் ஆர்வம் உள்ளவரா நீங்கள்
உங்களுக்கான சிறந்த வாய்ப்பு எம்மிடம் இருந்து

பின்வரும் துறைகளில் வெற்றிடங்கள் உள்ளன
- SME / Auto Marketing
- Microfinance
- Recovery
- Operations / Customer Service

உங்கள் CV மற்றும் சான்றிதழ்களுடன் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் மற்றும்
நேரங்களில் கீழுள்ள கிளைகளுக்கு வரவும்

| Interview Location | Date | Time | Vacancies available in |
|---|---|---|---|
| LOLC Finance - Jaffna (Former Commercial Leasing and Finance) Address- No.231, Power House Road, Jaffna | 02nd August 2023 | 9.00am to 4.00pm | Chunnakkam, Jaffna, Mannar, Nelliady |
| LOLC Finance - Kilinochchi Address -Karandipoku, A9, Kandy Road, Kilinochchi | 3rd August 2023 | 9.00am to 4.00pm | Kilinochchi, Mullaitivu, Puthukudiyiruppu, Vavuniya |
| LOLC Finance - Puthukudiyiruppu Address - Oddisuddan Road, Puthukudiyiruppu | 4th August 2023 | 9.00am to 4.00pm | Kilinochchi, Mullaitivu, Puthukudiyiruppu, Vavuniya |

**நிதித்துறையில் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றிணைய வாருங்கள்!**
மேற்கொண்டு திகதிகளில் கலந்து கொள்ள முடியாத விண்ணப்பதாரர்கள்
Applicants who are unable to attend on the above dates, please share your CV to
Careers@lolcfinance.com இக்கு உங்கள் CV யைப் பகிரவும்
**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**
பிரணவன் - 0772663902 (யாழ்ப்பாணம்/மன்னார்/சுன்னாகம்/சாவகச்சேரி/நெல்லியடி)
சுதாஹரன் – 0772394838 (கிளிநொச்சி/முல்லைத்தீவு/புதுக்குடியிருப்பு/வவுனியா)
(1126)

## ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ

## காணியும் மாடிக்கட்டடமும் விற்பனைக்கு

அமைவிடம் :- சாவகச்சேரி நகரில் இருந்து 3 km தூரத்தில்.A9 வீதியில் இருந்து 200 m உள்ளே. காளி கோவில் வீதியில் செவ்வக வடிவிலான காணியும் கட்டடமும்.

அளவு : - காணி - ஒரு பரப்பும் 17 குளியும் (வீதி முகப்பு 27 அடி நீளம்)
கட்டடம் : - கீழ்த்தளம் : 3130 சதுர அடி
மேல்தளம் : 2059 சதுர அடி

**ஆடைத் தொழிற்சாலை, காட்சி அறை, களஞ்சிய அறை மற்றும் அலுவலக பாவனைக்காக பயன்படுத்த முடியும்.**



அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும் :- 021 205 0346 / 021 492 3453/ 011 266 1866

கைத்தொலைபேசி :- 077 755 3242 - (திரு.பாபுஜி)
077 248 7201 - (திரு.விருஷன்)
075 254 6936 -(திரு. நிஷாந்தன்)

தொலைநகல் 0112662820. ஈ -மெயில் :- recovery @ hnb.lk
**உங்களது கேள்விக் கோரிக்கைகளை 30.08.2023 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்.**

**Head of Recoveries,**
**Hatton National Bank PLC,**
**Recoveries Department,**
**Level 18, HNB Towers, No.479, T.B.Jayah Mawatha,**
**Colombo 10**
(16560)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபன[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.